Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-884)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 31 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 11 (14.05.2003) புதன்கிழமை இதழ்: 222

# ‘சார்ஸ்’ நோயாளி அனுமதி; தகவலில் உண்மையில்லை!

## யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் ‘சார்ஸ்’ நோயாளி ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல்களால், நேற்று பரபரப்பான நிலை செய்தி வட்டாரங்களில் நிலவியது. எனினும், இது தவறான தகவல் எனப் பின்னர் உறுதிசெய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் நுணாவிலைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் - கடும் தலையிடி, முள்ளந்தண்டு வலி, உடல் முழுவதுமான நோ போன்ற நோய் அறிகுறிகளுடன் அனுமதிக்கப்பட்டார். அவர் தற்போது அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்து யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சதுர்முகத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது, இது ‘சார்ஸ்’ நோய் அறிகுறியாக (10 ஆம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் கூட்டமைப்பினருடனான விடுதலைப் புலிகளின் சந்திப்புக்கு வருகைதரும் இரா.சம்பந்தன் எம்.பியை தமிழ்ச்செல்வன் வரவேற்பதை முதற்படத்திலும், சந்திப்பு நடைபெறுவதை அடுத்த படத்திலும் காணலாம்.

# அதிகாரம் வாய்ந்த அலகு வட - கிழக்கில் வேண்டும்!

## ரெலோ உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக்கொலை!

வவுனியா கற்குழிப்பகுதியில் ரெலோ உறுப்பினர் ஒருவர், நேற்று இனந்தெரியாத நபர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் கற்குழி ரெலோ அலுவலகம் முன், வாகனம் ஒன்றைக் கழுவிக் கொண்டிருந்த, வே.சிவரமேஷ் (வயது 29) என்பவரை நோக்கியே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இயல்பு நிலைக்குப் புலிகள் வலியுறுத்து

(கிளிநொச்சி)

**வட-கிழக்கைக் கட்டியெழுப்பவும், சகஜ நிலையைத் தோற்றுவிக்கவும்- நிதி, நிர்வாக மற்றும் தொடர்புடைய கருமங்களை ஆற்றக்கூடிய பூரண அதிகாரங்களைக் கொண்ட அலகு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் - இது சட்டரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சியில், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச செல்வனைச் சந்தித்தபோதே இக்கருத்து எடுத்துக்கூறப்பட்டதாக - கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கிளிநொச்சியிலுள்ள சமாதானச் செயலகத்தில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் ஆரம்பமான இச்சந்திப்பு 1.45 மணிவரை நீடித்தது.

இச்சந்திப்பில் - விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனோடு, அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ். அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அமிர்தாப், திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், (10 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டன் மருத்துவமனையில் அன்ரன் பாலசிங்கம் அனுமதி

(லண்டன்)



விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்றுக் காலை லண்டனிலுள்ள வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டார்.

வன்னியில் தங்கியிருந்தவேளை, திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக லண்டன் சென்ற பாலசிங்கம் - மார்பில் ஏற்பட்ட வலி காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக - அவர் சிகிச்சைபெறும் வைத்தியசாலை வட்டாரங்கள் ஏ.சி.எவ். ரெலிவிஷன் சேவைக்குத் தெரிவித்தன.

அவரது உடல்நிலை கவலைப்படும் அளவிற்கு இல்லாதபோதும், அவர் சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருப்பதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## பிரதமரை மீண்டும் சந்தித்தார் அமெரிக்க அமைச்சர் றொக்கா

தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க அமைச்சின் அதிகாரி கிறிஸ்ரினா றொக்கா, இரண்டாவது தடவையாக நேற்றும் பிரதமரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

நேற்று மாலை, அலரி மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, அரச தரப்பில் அமைச்சர்கள் மிலிந்த மொறகொட, ஜி.எல்.பீரிஸ் ஆகியோரும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸும் உடனிருந்தனர்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாகவும், தற்போது ஏற்பட்டிருக்கும் தடைகள் குறித்தும் கேட்டறிந்த றொக்கா, இலங்கையில் நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என அமெரிக்கா விரும்புவதாகவும், இயல்பு நிலையை ஏற்படுத்த இருதரப்பினரும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். (01)

## வடமராட்சி மீனவர்கள் மீது மீண்டும் படையினர் கெடுபிடி

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில், கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மீதான கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக, மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தவாரம் வல்வெட்டித்துறைப் பகுதியில், வெடிபொருட்களுடன் படகொன்று இராணுவத்தினரால் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, மீனவர்கள் மீதான கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடற்தொழிலுக்கு செல்லும் மீன்பிடிப்படகுகளை படையினர் சோதனைக்குட்படுத்தி வருவதுடன், மீனவர்கள் மீதான பாஸ் கெடுபிடியும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடமராட்சிக் கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபடுத்தப்படும் மீனவர்களது படகுகளில் வெடிகுண்டுகள் இல்லையென்பதை, மீனவர்கள் உறுதிப்படுத்த வேண்டுமென படையினர் கோரியுள்ளனர் எனவும் அறியவருகின்றது.

கடந்த வெள்ளியன்று மீனவர் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



சார்ஸ் எண்டதும் சனமெல்லே கதிகலங்குது...

## கொழும்பு வரும் நோர்வே அமைச்சர்

## புலிகளை சந்தித்த பின்னர் பிரதமரை சந்திக்க திட்டம்!

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வந்த சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையை நீக்கி, இருதரப்பினரையும் இணக்கத்துக்குக் கொண்டுவர - நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் இன்று இலங்கை வருகின்றார்.

இன்று கொழும்பை வந்தடையும் இவர், பிரதமரைச் சந்தித்து பேசவுள்ளார். நாளை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை வன்னியில் சந்தித்து பேச்சு நடத்தியதும், புலிகளுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக மீண்டும் அவர் பிரதமரைச் சந்திக்கவுள்ளார். (01)

## கடும் காற்றுடன் குடாநாட்டில் மழை!

யாழ். குடாநாடெங்கும் நேற்றிரவு, 11.20 மணி முதல் கடும் காற்றுடன் கூடிய பலத்த மழை பலமணிநேரமாகப் பெய்தது.

கடுங்காற்றினால் பயன்தருமரங்கள் பல முறிந்துவீழ்ந்தன. முறிந்து வீழ்ந்த மரங்கள் வீதியெங்கும் காணப்பட்டன.

இதேவேளை, நேற்று அதிகாலை யாழ்.குடாநாட்டில் திடீரென வீசிய கடும்காற்றினால் வடமராட்சியில் பரவலான சேதங்கள் ஏற்பட்டதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். அதிகாலை 5.30 மணியளவில் வீசிய இக்கடும் காற்றினால் நவிண்டில், (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி-913)

# எந்தப் பிரச்சனைகளை எதிர்கொள்ளவும் ஐ.தே.மு. அரசு தயாராகவே உள்ளது!

## அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அறிவிப்பு

எந்தப் பிரச்சனைகளை எதிர் கொள்வதற்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தயாராக இருப்பதாக நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு இப்போது தேர்தலை அறிவித்தாலும் அதை எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். தேர்தல் நடத்தப்பட்டால் மிகப் பெரிய பெரும்பான்மையுடன் மீண்டும் வெற்றி பெறுவோம். மக்கள் எமது பக்கமே இருக்கிறார்கள்.

ஜனாதிபதி, 17 மாதங்களாகப் பொறுத்திருந்து பார்த்து - அரசாங்கத்தைக் குழப்பும் நோக்குடன் அமைச்சர் மிலிந்த மொறகொடவிடமிருந்து பொறுப்புக்கள் சிலவற்றைப் பறித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்துக்கும், தேசிய லொத்தர் சபைக்கும் எந்தத் தொடர்புமே இல்லை. கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் கீழ்தான் லொத்தர் சபை இருக்கவேண்டும். ஜனாதிபதி இதை எவ்வாறு செயற்படுத்தப் போகிறார் என்பது தெரியவில்லை.

இதுதொடர்பாக, பிரதமருடன் ஜனாதிபதி முதலில் கலந்து ஆலோசித்திருக்க வேண்டும். ஆனால், அவர் முறைதவறி நடந்துள்ளார். மக்களின் ஆணையுடன் அமைச்சர்களைப் பிரதமர் நியமித்திருக்க, ஜனாதிபதி இதில் தலையிட்டுள்ளார்.

இந்தச் சூழல், ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டையும் பாதிக்கலாம். இது துரதிர்ஷ்டமான நிலை என அவர் மேலும் தெரிவித்தார்.

# சாவகச்சேரிப் பகுதிக்கு அடுத்து அரியாலையிலேயே அபிவிருத்தி!

## யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன்

யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரிக்கு அடுத்தபடியாக அரியாலை, கொழும்புத்துறைப் பிரதேசங்களே யுத்தத்தால் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்த பிரதேசங்களாகும். எனவே, இந்தப் பிரதேசங்களை முக்கியமாக அபிவிருத்தி செய்ய வேண்டும்.

- இவ்வாறு, கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நல்லூர் பிரதேச செயலகத்தின் உப அலுவலகத்தை, அரியாலை சரஸ்வதி நூல் நிலையத்தில் திறந்து வைத்து உரையாற்றிய அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவித்ததாவது, காலங்காலமாக எம்மிடம் வாக்குக்கேட்டு வந்தவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக வந்தபின் எமது பிரதேசத்தைக் கவனிக்கத் தவறிவிடுகின்றார்கள். தங்கள் வாக்குறுதிகளையும் மறந்து போய்விடுகிறார்கள்.

அரியாலை மக்களும் மீண்டும் மீண்டும் இவர்களை நம்பி வாக்குப் போட்டு இறுதியில் ஏமாந்து போகின்றார்கள். எனவே, மக்களே இவர்களுக்கு அடிக்கடி அழுத்தம் கொடுத்து வாக்குறுதிகளை நிறைவேற்ற வைக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலர் வே.முருகையா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், அரியாலை அபிவிருத்திச் சங்கத்தலைவர் எஸ்.ரி.பத்மநாதன், யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சொலமன் சிறில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நல்லூர் பிரதேச சபை உப அலுவலகம் திங்கள், வியாழன், சனி ஆகிய தினங்களில் செயற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### குப்பைகளைப் புதைப்பதில் நெருக்கடி

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குப்பை கூழங்களைப் புதைப்பதற்கான இடம், கட்டாக்காலி நாய்களைக் கொன்று புதைப்பதற்கான இடம் என்பவற்றில் இராணுவத்தினர் காவலரண்களை அமைத்துள்ளனர்.

இதனால், அப்பகுதியில் குப்பைகளையும், கொல்லப்பட்ட நாய்களையும் புதைக்க முடியாமையினால், சுகாதாரப் பகுதியினர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (29)


YOGI BEAUTY PARLOUR

LADIES HERBAL BEAUTY CARE & FITTNESS CENTRE

(Academy of Beauty Culture and Hair Dressing)

குறுகிய கால புதிய Diploma பயிற்சி வகுப்புக்கள் 19-05-2003 முதல் ஆரம்பமாக உள்ளது.

அழகுக் கலையும் சிகிச்சை முறைகளும் (Beauty Culture & Therophy)

முக ஒப்பனையும் தலை அலங்காரங்களும், மணப்பெண் அலங்காரமும் (Make-up and Hair Dressing)

இதில் பாடக்குறிப்புகளுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சியளிக்கப்படும். சேர விரும்பும் மாணவிகள் தொடர்பு கொள்ளவும்.

75, அம்மன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)

T.P - 2222796

(345)



இலங்கை அரசு வடக்கு கிழக்கு மாகாண சபை
வடக்கு கிழக்கு துரித மீளமைப்பு திட்டம்
தேசிய போட்டி கூறுவிலை கோரல்
கடன் இல: 2880 சீ.இ.
(நிர்மாண வேலைகள்)

கேள்வி அறிவித்தல் திருத்தமும் திகதி நீடிப்பும்.

மேற்படி திட்டத்தின் தேசிய போட்டி கூறுவிலை கோரல் சம்பந்தமாக 07.05.2003 பத்திரிகையில் பிரசுரமான கேள்வி அறிவித்தலில் பின்வருமாறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது.

1. ஐ.எவ்.பி.இல : ஜேஎவ்/நீர்ப்/01
2. பந்தி 03 இல் கூறப்பட்ட கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் திகதி 18.06.2003 பி.பகல் 3.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.
3. பந்தி 05 இல் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 20.06.2003 பிற்பகல் 3.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.
4. அட்டவணையில் கேள்வி குறியீட்டு இல : ஜேஎவ்/நீர்ப்/டிஎஸ்/01

ஒப்பம் செ.பத்மநாதன்
அரச அதிபர்
மாவட்ட செயலகம்
யாழ்ப்பாணம்

(சி-934)



சிறுவிளம்பரம்

விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையிலுள்ள YAMAHA MATE 50 ( Red Color) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.Sabesan, 101/1 ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (சி-930)



ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
இளைய தளபதி விஜய், மீராஜஸ்மின் நடித்த



புதிய கீதை

10.30, 2.30, 6.30, 9.30

(சி-883)



நிறஞ்சனாஸ் சங்கானை

அஜித், சிம்ரன், கவுண்டமணி நடித்த

அவள் வருவாளா

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)

HANNIBAL

(சி-882)



இன்றுமுதல் 3 நாட்களுக்கு

திருமறைக் கலாமன்றம்

நடாத்தும்

மூவினக் கலைஞர்கள் கலந்துகொள்ளும்

அமைதிக்கான நிகழ்வுகள்

கலை விழா

முதலாம் நாள் - 14-05-2003 புதன்கிழமை
நேரம்: காலை 9.00 மணிமுதல் இரவு 11.30 மணி வரை
இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

பிரதம விருந்தினர்
பேராசிரியர் எஸ். மோகனதாஸ்
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

★ கலைநிகழ்ச்சிகள் ★

★சிங்கள நடனங்கள் - செயல்முறைவிளக்கம்
(திருமதி மிறண்டா ஹேமலதா)
★சோமலதா சுபசிங்காவின்
தொப்பி வியாபாரி (சிறுவர் நாடகம் - சிங்களம்)
அறிமுக உரை - Dr.திரு.சந்தனபாலித்தா
★புரட்சிப்பறவைகள்அமைப்பின்
'கரைதேடும் ஓடங்கள்' (நாடகம் - தமிழ்)
அறிமுக உரை - திரு புதுவை அன்பன்
★இந்திய சாஸ்திரிய நடனங்கள் - செயல் முறை விளக்கம்
(திருமதி ஆனந்த ஜோதி தர்ஷனன்)
★சமாதானம் தொடர்பாக கலைஞர்களுடனான கலந்துரையாடல்
★வசந்தா ஒபயசேகராவின்
"தீர்த்த யாத்ரா" (சிங்களத் திரைப்படம்)
★என்னைப் பார் (நாடகம் - ஆங்கிலம்)
அறிமுக உரை - திரு. ஜெனோம் டீ சில்வா
★பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திராவின்
"சிங்கபாகு" (நாடகம் - சிங்களம்)
அறிமுக உரை - திருமதி லலிதா சரச்சந்திரா
★திருமதி மிறண்டா ஹேமலதாவின்
மாணவிகள் வழங்கும்
சிங்களப்பாரம்பரிய நடனங்கள்

திருமறைக்கலாமன்ற சிறுவர் கலைக்கூட, சிறுவர் சமாதானவலயங்களைச் சேர்ந்த சிறுவர்கள் பங்குகொள்ளும்

சிறுவர் சமாதானப் பாசறை

இரண்டாம் நாள் - 15.05.2003 வியாழக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

★ நிகழ்வுகள் ★

★சிறுவர் பாசறை
★சிறுவர் பாடல்களும் விளையாட்டுக்களும்
★சிறுவர்களுடனான கலந்துரையாடல்
★சிறுவர் கருத்துரையமர்வு
(வள ஆளுநர்களாக பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்குகொள்வார்கள்)
★சமாதானத்துக்கான சிறுவர் கலாசார எழுச்சி ஊர்வலம்
( மாலை 5 மணிக்கு பல்வேறு பிரதேச கலைவடிவங்களை நிகழ்த்தியவாறு யாழ். நகர வீதிகளுக்கூடாக சிறுவர்கள் ஊர்வலமாக வலம் வருவார்கள். )

நேரம் : இரவு 8.30 மணிமுதல்
இடம் : மன்ற அரங்கு, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்ப்பாணம், கண்டி, இளவாலை, மாத்தறை, வன்னி, பண்டாரகம, வவுனியா, பிபில, மன்னார், மொறத்துடுவ, திருகோணமலை, புத்தளம், பல்பொல, மட்டக்களப்பு, மஸ்ரிய, கொழும்பு, ஹப்புத்தளை ஆகிய பிரதேச சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகளும், பேச்சுக்களும் இடம்பெறும்)

இலங்கையிலுள்ள அனைத்துத் திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்களும் பங்கு கொள்ளும்

திருமறைக் கலாமன்ற மாநாடு

மூன்றாம் நாள் - 16.05.2003 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
(திருமறைக் கலாமன்றம் தொடர்பாக பல்வேறு தலைப்புகளிலும் ஆய்வுரைகள் இடம் பெறும்.)

★கலைநிகழ்ச்சிகள்★

நேரம் : மாலை 7.30 மணி முதல்
இடம் : மன்ற அரங்கு, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(கொழும்பு, திருகோணமலை, வவுனியா, இளவாலை, பாணந்துறை, மன்னார், புத்தளம், வன்னி, ஹப்புத்தளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றங்கள் வழங்கும் பல்வேறு சிறப்புக் கலைநிகழ்வுகள்)

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி-931)

-திருமறைக் கலாமன்றம்

# ஜனாதிபதியுடனான மோதலைத் தவிர்க்க ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் முயற்சி!

## ஆலோசனைக் குழுவும் அமைப்பு



(கொழும்பு)

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தன்னிச்சையாகப் பொறுப்பேற்றுக் கொண்டதையடுத்து கொழும்பு அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தணிக்கும் முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரப் போவதாகவும், அவரை எதிர்பதற்குரிய பலம், அதிகாரம் என்பன தமக்கு இருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

எனினும் ஜனாதிபதிக்கும் - அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தணிக்கும் நடவடிக்கைகளை எடுக்குமாறு, நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அமைச்சரவை சகாக்களுக்குப் பணித்துள்ளார்.

இந்த நெருக்கடி நிலையைத் தணிக்கும் பொறுப்பு அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமையிலான குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமையில் இடம்பெற்றது.

இதேவேளை, இந்த விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்கென விசேட அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டங்களில் ஜனாதிபதியுடனான நெருக்கடி நிலை மேலும் அதிகரிக்காமல் இருப்பதற்குரிய வழிவகைகள் குறித்து ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே ஜனாதிபதி சந்திரிகாவின் தன்னிச்சையான போக்கிற்கு மக்களை அணிதிரட்டி எதிர்ப்புத்



தெரிவிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் ஐ.தே.க. அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.



பிரச்சினையில் சிக்கியிருக்கும், கொழும்பிலுள்ள அரசாங்க அச்சகத்தின் முன்பாக பொதுமக்கள் கூடியிருக்கும் காட்சி இது.

# லொத்தர் சபை கையேற்புக்கு ஜே.வி.பி ஆதரவு தெரிவிப்பு!

(கொழும்பு)

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கையேற்றதற்கு ஜே.வி.பி. ஆதரவு தெரிவித்துள்ளது.

அரசியலமைப்புரீதியாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு உள்ள அதிகாரத்தையே அவர் பாவித்துள்ளார். இதைச் சட்டத்துக்கு முரணானதென எவரும் கூறிவிடமுடியாது என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

# மாற்று அரசாங்கம் அமைப்பது பற்றி ஆராய்வதற்கு பொ.ஐ.மு. குழு அமைப்பு!

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைப் பதவி கவிழ்த்துவிட்டு, மாற்று அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக ஆராய்ந்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்குப் பொதுஜன ஐக்கிய முன்னணி குழுவொன்றை நியமித்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக்கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான இந்தக் குழுவில் - மைத்திரிபால சிறிசேன, லக்ஷ்மன் கதிர்காமர், சரத் அமுனுகம, ஜனக பண்டார தென்னக்கோன், மங்கள சமரவீர ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவினர்- தற்போதையநிலையில், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு ஆட்சியை அமைப்பதற்கான சாத்தியங்கள் குறித்தும், பொதுமக்களின் எதிர்பார்ப்புக் குறித்தும் ஆராயவுள்ளனர்.

இவர்களது அறிக்கை- விரைவில் ஜனாதிபதி சந்திரிகாவுக்குச் சமர்ப்பிக்கப்படும். இந்த அறிக்கையின்படியே அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா தீர்மானிப்பார் எனப் பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா கையேற்றதையடுத்து -

அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பயன்படுத்தி ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிகளைத் தீவிரப்படுத்தவும் பொதுஜன ஐக்கிய முன்னணி தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

# நெருக்கடியான இந்தச் சூழலில் கட்சிகளின் ஒற்றுமை அவசியம்

## அஸ்கிரிய பீடாதிபதி கோரிக்கை



உடுகம புத்திரகித்த தேரர்

(கொழும்பு)

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்று அஸ்கிரிய மகா நாயக்கர் வண. உடுகம புத்திரகித்த தேரர் கேட்டுள்ளார்.

தற்போதைய அரசியல்நிலை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார். மேலும், தற்போதுள்ள சூழ்நிலையில்- சமாதான முயற்சிகள் வெற்றிபெற்று நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டுசெல்ல வேண்டியது அவசியமாகும்.

இதனால், கட்சி பேதங்களை மறந்து அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும். தேர்தல் காலப் பகையுணர்வுகளை அனைத்துக் கட்சிகளும் மறந்து செயற்பட வேண்டும் எனவும் வண. உடுகம புத்திரகித்த தேரர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

ராமன்ய நிக்காயவின் சங்க நாயக்கர்- தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டபோது,

சில கட்சிகள் அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்காக முறைகேடான நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன. இத்தகைய செயற்பாடுகளை நிறுத்தி அமைதியேற்பட அனைத்துத் தரப்புக்களும் ஒத்துழைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

### வெசாக் போயா தினம் தேசிய விழாவாக பிரகடனம்

(கொழும்பு)

வெசாக் போயா தினத்தை அரசாங்கம் தேசிய விழாவாகப் பிரகடனம் செய்துள்ளது.

நாளை, வெசாக் விழாவை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குப் பிரதமர் விசேட குழுவொன்றையும் நியமித்துள்ளார்.

அத்துடன், ஐந்து உபகுழுக்களும் பிரதமரால் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நாடு முழுவதும் வெசாக் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காகவே அரசாங்கம் இந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

### வடமராட்சி அதிபர்களுக்கான கலந்துரையாடல்

வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை மு.ப.9 மணி முதல் பி.ப. 4 மணிவரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில்- மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், அதிகாரிகளினால் நடாத்தப்பட்டவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (116)

# தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகம் கட்டைபறிச்சானில் திறந்து வைப்பு!

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் - கட்டைபறிச்சானில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அலுவலகம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் இந்த அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இந்த அலுவலகத்தின் முதற் செயற்பாடாக - அண்மையில் மூதூரில் ஏற்பட்ட கலவரங்களின்போது உயிரிழந்த கடற்கரைச்சேனை வாசிகளான மூவரது குடும்பத்தினருக்கும் தலா ஐயாயிரம் ரூபா உதவித் தொகை வழங்கப்பட்டது.

# வட-கிழக்கு உள்ளூராட்சி தேர்தல் ஜூன் 25 இல் நடத்துவதற்கு ஏற்பாடு

உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து, வடக்கு-கிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமனப் பத்திரங்களை ரத்துச்செய்யாவிட்டால்- அடுத்த மாதம் தேர்தல்களை நடத்த வேண்டியிருக்கும் என உதவி தேர்தல் ஆணையாளர் அருந்தவச்செல்வம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததால், ஜூன் மாதம் 25 ஆம் திகதி வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன. வாக்களிப்பு நிலையங்களில் பாதுகாப்புக்கெனத் தலா மூன்று பொலிஸாரை நியமிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார் அருந்தவச் செல்வம்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த 53 உள்ளூராட்சி சபைகளுக்கு, கடந்த மார்ச் 14 ஆம் திகதி தேர்தல் இடம்பெறவிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் நெல் கொள்வனவுக்கு இரண்டரைக் கோடி ரூபா அரசு ஒதுக்கீடு!

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக அரசாங்கம் இரண்டரைக் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெரும்போகச் செய்கையின்போது- மன்னார் மாவட்டத்தில் 28 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் 48 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை, மன்னார் விவசாயிகள் விளைச்சலாகப் பெற்றிருந்தனர்.

இந்த நெல்லைச் சந்தைப்படுத்த முடியாத மன்னார் விவசாயிகள்- அரசாங்கம் தம்மிடமுள்ள நெல்லைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதையடுத்தே அரசாங்கம் மன்னார் விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு இரண்டரைக் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த நிதி மன்னார் அரசாங்க அதிபர் மூலமாக, மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், விவசாய சம்மேளனங்களுக்கும் வழங்கப்பட்டு நெல் கொள்வனவுக்கு ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட மாநாடு ஒன்றில் இந்த விடயம் குறித்து ஆராயப்பட்ட பின்னரே, நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி - மன்னார் அரச அதிபருக்கு இரண்டரைக் கோடி ரூபாவை வழங்குமாறு திறைசேரிக்கு உத்தரவிட்டார்.

# ஐ.தே.க - பொ.ஐ.மு. மோதல்; நாவலப்பிட்டியில் ஐவர் காயம்!

(கொழும்பு)

நாவலப்பிட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பொதுஜன ஐக்கிய முன்னணி அலுவலகம் தாக்கப்பட்டதையடுத்து, அப்பகுதியில் ஏற்பட்ட மோதல்களில் ஐந்து பேர் காயமடைந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களிலேயே ஐந்து பேர் காயமடைந்தனர்.

இந்த மோதல்களையடுத்து நாவலப்பிட்டிப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

# காலம் காலமாக ஏமாற்றப்பட்டது போல் இனிவரும் காலத்திலும் நடக்கக்கூடாது!

## வவுனியா கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர்

காலங்காலமாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளில் தமிழர்கள் ஏமாற்றப்பட்டு வந்தனர். அந்த நிலை இனியும் ஏற்படக்கூடாது என, வவுனியா மாவட்ட கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் சிறிநாத் தெரிவித்தார்.

தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக, வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்- நாம் பலம்வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். அவ்வாறு இருந்தமையால் தான் நாம் சமாதானப் பேச்சுக்கு வரமுடிந்தது. பலமுடன் இருந்தால்தான் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளைப் பெற்றெடுக்க முடியும். சமாதான காலத்திலும் எமது போராளிகளை இழந்துள்ளோம்.

இனியும் அப்படியான ஒரு நிலை ஏற்பட அனுமதிக்க முடியாது. 17 ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகளையும், 80 ஆயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்களையும் இழந்து பெரும் தியாகவேள்வியைச் செய்துள்ளோம்.

தமிழ் மக்கள் விடுதலைபெற்று, சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காகத் தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் செய்திருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (03)

# பட்டினிக்கு எதிரான நிறுவனத்தால் மண்கும்பானில் விசேட உதவிகள்

(மண்கும்பான்)

மண்கும்பான் பகுதியில் மீளக் குடியமர்ந்த விவசாயக் குடும்பங்கள் நெற்செய்கை மேற்கொள்வதற்குத் தேவையான விதைநெல் மற்றும் விவசாயக் காணிகளைச் சுற்றி வேலி அடைப்பதற்குத் தேவையான கம்பிகளையும், விவசாய உபகரணங்களையும் பட்டினிக்கெதிரான நிறுவனம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அத்துடன், விதவைகளுக்கான சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதற்காக கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மாடு வளர்பு போன்ற திட்டங்களையும் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. (53)

## பரிசில் வழங்கி கௌரவிப்பு

தென்மட்டுவில் - வேதக்கேணி அறநெறிப் பாடசாலையில் - இந்து மாநாட்டையொட்டி நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றி, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இந்து சமய கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் பரிசில் வழங்கி கௌரவித்தார்.

## சாவகச்சேரி கூட்டுறவுச் சங்கத்துக்கு கணினி

சாவக்ச்சேரி ப.நோ.கூ.சங்கங்கத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் கணினி ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார். இதற்கு முன்னரும் கூட்டுறவு அமைச்சினால் ஒரு கணினி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (29)

# மாடுகளின் எச்சங்களால் நீர்வேலியில் துர்நாற்றம்

(ஆவரங்கால்)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அருகில், பிரதேச சபையால் தனியாருக்கு வழங்கப்பட்ட மாட்டிறைச்சிக் கடையில் நாளாந்தம் விற்பனைக்காக வெட்டப்படும் மாடுகளின் எச்சங்கள் வீதியோரங்களில் கொட்டப்படுகிறது. இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது.

அவ்வீதியால் போக்குவரத்துச் செய்யும் மக்களும், பாடசாலை மாணவர்களும் இதனால் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (80)

## பூரணை உற்சவம்

(நவிண்டில்)

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான புரணை உற்சவவிழா நாளைமறுநாள் நடைபெறுமென ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (116)




இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு, சங்கானை தெற்கு கராம மக்களின் எழுச்சி விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அனறையதினம் சங்கானை மாவடி ஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபையின் அனுசரணையுடன் - சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்தியைப் படத்தில் காணலாம். (படம்: பிரணவா)

# ரெலிகொம் நடமாடும்சேவை வடமராட்சியில் இடம்பெற்றது

(நெல்லியடி)

ரெலிகொம் நிறுவனம் கடந்த சனிக்கிழமை தனது நடமாடும் சேவை ஒன்றை வடமராட்சிப் பகுதியில் நடத்தியது.

வடமராட்சி - மாலிசந்தி தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தில் நடாத்தப்பட்ட இச்சேவையின் போது, 2000 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் இணைப்புகளைப் பெற விண்ணப்பித்தவர்களுக்கு அன்றைய தினமே மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு இணைப்புக்கள் வழங்கப்பட்டன.

ஏனையவர்களுக்கும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் இணைப்புக்களை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் இணைப்புகளைப் பெறுபவர்கள் ஒரு வருடத்துக்கு மாதாந்தம் 1500 ரூபாவுக்குக் குறையாத கட்டணத்தினைச் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடனேயே இணைப்புகள் வழங்கப்பட்டன.

இதனால், பலர் இணைப்புக்களைப் பெறுவதில் ஆர்வங்காட்டாது திரும்பிச் சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது. (13)

# மட்டு, திருமலை மாவட்டங்கள் கடும் புயற்காற்றினால் பாதிப்பு

## யாழ். குடாநாட்டிலும் எதிரொலித்தது

(திருகோணமலை)

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் இரவும், நேற்று அதிகாலையும் வீசிய புயற் காற்றினால் பலத்த சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு மாவட்டம் மற்றும் திருமலை மாவட்டத்தின் மூதூர் பகுதிகளிலேயே புயற்காற்றின் தாக்கம் அதிகமாக இருந்தது. நேற்று முன்தினம் இரவு ஒரு மணி நேரமாக சுமார் 36 கி.மீ வேகத்தில் புயற்காற்று வீசியது.

நேற்று அதிகாலை 2 மணிமுதல் 2.45 மணிவரை மீண்டும் புயற்காற்று இப்பகுதிகளில் வீசியது. இதனால், மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன், வீடுகளின் கூரைகளும் தூக்கி வீசப்பட்டன. மின்சார, தொலைபேசிக் கம்பங்களும் முறிந்து வீழ்ந்தன.

இந்தப் புயற்காற்றினால் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் பல வீடுகள் சேதமுற்றதாகவும் தெரியவருகிறது. பல இடங்களில் வீதிப் போக்குவரத்துக்களும், மின்சார விநியோகமும் தடைப்பட்டிருக்கிறது.

இதேவேளை, யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சிறிய சூறாவளிகள் நேற்று ஏற்பட்டன. இதனால் பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன், மின்விநியோகமும் ஆங்காங்கே தடைப்பட்டது.

வங்கக் கடலில் ஏற்பட்ட தாழமுக்கத்தினால் தொடர்ந்தும் சீரற்ற காலநிலை நிலவிவருவதுடன், அவ்வப்போது மழையும் பெய்துவருவது குறிப்பிடத்தக்கது.

# அகவொளி நிலையத்தில் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

அகவொளி குடும்பவளத் துணை நிலையத்தில் நாளை வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நடைபெறவுள்ள முழுநிலாக் கருத்தரங்கில் வலிகாமம் வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் "ஆக்ரோஷ உணர்வுகளைக் கையாளல்" எனும் தலைப்பில் கருத்துரை வழங்கவுள்ளார்.



இரண்டாவது உலக இந்து மாநாட்டையொட்டி கட்டைவேலி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்திப்பவனி ஆரம்பித்தபோது, சங்கப் பணிப்பாளர்கள் - பணியாளர்களுடன் எடுத்துக்கொண்ட படம்.

## கனரக வாகன சாரதிகளுக்கு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

'ஹலோ ட்ரஸ்ட்' மிதிவெடி அகற்றும் நிறுவனத்தின் கனரக இயந்திர வாகனச் சாரதிப் பணிக்காகப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்குத் தற்போது பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

பயிற்சிகள் முடிவடைந்த பின் இவர்களையும் மிதிவெடி அகற்றும் பணியில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன்மூலம் மிதிவெடி அகற்றும் பணிகள் மிகவிரைவாக நடைபெறுமெனத் தெரியவருகிறது.

தற்போது கலட்டிப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணி வேகமாக நடைபெற்றுவருவதுடன், இராமநாதன் வீதிப் பகுதியிலும் மிதிவெடி அகற்றும் பணிகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## வருடாந்த பொங்கல் விழா

(நவிண்டில்)

கரணவாய் வடக்கு எள்ளங்குள பதி அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறுமென அறங்காவல் சபையினர் தெரிவித்தனர். (116)

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

பத்தாவது அகவையில்



பெயர் :ச.இதயச்சந்திரன்
முகவரி:கண்ணகை அம்மன் கோவில், வட்டுக்கோட்டை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்பம்

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்



## மாணவர் மலர்

(01) கீழே தரப்பட்டுள்ள வினாக்களில் மூன்று சம்பவங்கள் தொடர்பான உரையாடலின் ஒழுங்கு மாறுபட்டுக் காணப்படுகின்றது. இந்த உரையாடல்களை ஒழுங்குமுறைப்படி திருத்தமாகக் குறிப்பிடும் விடையின் கீழ் கோடிடுக.

01. தபாற்கந்தோருக்கு வருகை தந்த தந்தைக்கும், மகனுக்கும் இடையே நடந்த உரையாடல்.
A. ஆறு முத்திரைகள் வாங்கவேண்டும்.
B. முதலில் கடிதங்களுக்கு முத்திரைகளை வாங்கி ஒட்டுவோம்.
C. ஒரு முத்திரையின் விலை நான்கு ரூபாய் ஐம்பது சதமாகும்.
D. ஒரு முத்திரையின் விலை என்ன?.
E. எத்தனை முத்திரைகள் வாங்கவேண்டும்?.

**1. A, B, C, D, E**     **2. B, E, A, D, C**     **3. E, A, D, C, B**

02. சந்தையில் பொருட்கள் வாங்கச்சென்ற ஒருவருக்கும், வியாபாரி ஒருவருக்கும் இடையே நடைபெற்ற உரையாடல்.

A. இந்தக் கூடைக்குள் இருக்கும் பழங்கள் ஒவ்வொன்றும் பத்து ரூபாய்.
B. எனக்குப் பத்துப் பழங்கள் வேண்டும்.
C. மாம்பழம் ஒன்றின் விலை என்ன என்று சொல்வீர்களா?
D. எந்தக் கூடையில் உள்ள பழங்களை வாங்கப் போகின்றீர்கள்.
E. மற்றைய கூடைக்குள் இருக்கும் பழங்கள் ஒவ்வொன்றும் பன்னிரண்டு ரூபாய்.

**1. A, C, B, D, E**     **2. C, E, A, B, D**     **3. C, A, E, B, D**

03. வீட்டில் தாய்க்கும், மகனுக்கும் இடையே நடந்த உரையாடல்.

A. அப்பா எத்தனை மணிக்கு வீட்டுக்கு வருவார்.
B. அம்மா இன்று மாலை பூங்காவுக்குப் போவோமா.
C. அப்பா வந்ததும் நாங்கள் எல்லோரும் போவோம்.
D. அப்பா வேலை முடிந்து வந்ததும் போவோம்.
E. ஐந்து மணிக்கு முதலில் வந்துவிடுவார்.

**1. B, D, A, E, C**     **2. B, C, A, E, D**     **3. A, E, B, D, C**

(02) கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

*குளத்து நீரைக் குடிப்பதனால்*
*கெடுதல் வந்திடும் - அதனைக்*
*காய்ச்சி நாளும் குடிப்பதனால்*
*தீமை நீங்கிடும்!*

*தூய்மையான தண்ணீரையே*
*தொடர்ந்து அருந்துவோம் - நம்மைச்*
*சுற்றி உள்ள நோய்களை நாம்*
*தூர விலக்குவோம்.*

01. எந்த நீரைக் குடிப்பதனால் கெடுதல் வரும் எனப்பாடலிலே குறிப்பிடப்பட்டுள்ளது.
.............................................................................

02. 'காய்ச்சி நாளும் குடிப்பதனால் தீமை நீங்கிடும்' என்ற பாடலடியின் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக.
.............................................................................

03. நம்மை நோய்கள் அனுகாமல் இருக்க என்ன செய்யவேண்டும்.
.............................................................................

04. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக.
1. குளம் ...............................................................
2. நோய் ...............................................................

(03) கீழே தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்க.

நெல், அவரை, கோதுமை, பட்டாணி, இறுங்கு, குரக்கன், கடலை, சாமை

| தானிய வகை | விதை வகை |
|---|---|
| | |
| | |
| | |
| | |

(04) கட்டத்திற்குள் தரப்பட்டுள்ள சொற்களைக்கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

மேசை, சட்டி, பானை, குவளை, கோடரி, கதிரை, கட்டில், குடம், அலுமாரி, அரிவாள், வாங்கு, ஓடு

1. களிமண்ணினால் செய்யப்படும் பொருட்கள்.
.............................................................................
2. இரும்பினால் செய்யப்படும் பொருட்கள்.
.............................................................................
3. மரப்பலகையினால் செய்யப்படும் பொருட்கள்.
.............................................................................

(05)

| | | |
|---|---|---|
| தந்தம் - 1 2 1 4 | சருமம் - 6 7 3 4 | காவல் - 8 5 9 |

மேலே தரப்பட்டுள்ளவற்றை அனுசரித்துக் கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குக் குறியீடான இலக்கங்களை எழுதுக.
(1) காந்தம்......................
(2) தருமம்......................
(3) மந்தம்......................
(4) வசந்தம்......................
(5) மருதம்......................
(6) தவம் ......................
(7) கால் ......................
(8) சந்தம்......................

(06) பின்வரும் சொற்றொடர்களில் தொடர்பற்ற சொல்லைத் தெரிந்தெடுத்து, அதன்கீழ்க் கோடிடுக.

1. உலகம், புவி, விசும்பு, அகிலம், குவலயம்.
2. அணங்கு, மாதா, நங்கை, வனிதை, பெண்.
3. நிலவு, திங்கள், மதி, பகலவன், நிலா.
4. தலைவன், மைந்தன், புத்திரன், குமாரன், புதல்வன்.
5. வழி, தெரு, சாலை, பாதை, அடவி.

கீழே தரப்பட்டுள்ள படங்களைப் பார்த்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை தருக.







1. 2/4 நிறந்தீட்டப்பட்டுள்ள படத்தின் இலக்கத்தை எழுதுக. (..................)
2. 7/15 நிறந்தீட்டப்பட்டள்ள படத்தின் இலக்கத்தை எழுதுக. (..................)
3. 1/3 நிறந்தீட்டப்பட்டுள்ள படத்தின் இலக்கத்தை எழுதுக. (..................)
4. 1/7 நிறந்தீட்டப்பட்டுள்ள படத்தின் இலக்கத்தை எழுதுக. (..................)
5. 3/8 நிறந்தீட்டப்படாத படத்தின் இலக்கத்தை எழுதுக. (..................)
6. 4/8 நிறந்தீட்டப்பட்ட படத்தின் இலக்கத்தை எழுதுக. (..................)

(08) கீழே தரப்பட்டுள்ள கட்டத்திற்குள் உள்ள எண்களுள் எந்த இரண்டு எண்களைக் கூட்டினால் இந்த ஒவ்வொரு விடையும்கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| 430 | | 308 |
| 291 | | 489 |
| | 561 | |

| | | | |
|---|---|---|---|
| (1) | 738 | .............. | .............. |
| (2) | 779 | .............. | .............. |
| (3) | 869 | .............. | .............. |
| (4) | 919 | .............. | .............. |
| (5) | 599 | .............. | .............. |
| (6) | 852 | .............. | .............. |

(09) "நேற்றுப் பெய்த அடை மழையால்"............... என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தபட்சம் நான்கு சொற்களை யாவது கொண்டிருத்தல் வேண்டும்.

.............................................................................
.............................................................................
.............................................................................
.............................................................................
.............................................................................
.............................................................................
.............................................................................

(தொடரும்...)

வி.என்.எஸ். உதயசந்திரன்
B.A.(Cey) B.Ed(Hons) Dip. in Ed.

# க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2003

# கணிதம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

28. B யிலே வெளிப்புறமாகத் தொடுகின்ற இரு வட்டங்கள் உருவிலே காணப்படுகின்றன. ஒரு புறப்புள்ளி O இல் இருந்து இரு வட்டங்களுக்கும் வரையப்பட்டுள்ள தொடலிகள் OA,OB,OC ஆகும். OA=OC எனக் காட்டுக.
இதற்குக் காரணம் தருக.




A,B ஐ மையத்தில் தொடுக்க.
$AX = BX$ (ஆரை)
$X\hat{A}O = X\hat{B}O$ (செங்கோணம்)
$OX = OX$ (பொது)
$O\hat{X}A = O\hat{X}B$ (செ.ப.ப.)
ஆகவே $OA = OB$
இதேபோல்
$OC = OB$ ஆகும். எனவே,
$OA = OC$ ஆகும்.

29. கம்பனி ஒன்றின் 10 ரூபா பங்குகளை 15 ரூபா வீதம் வாங்குவதற்கு மோகன் ரூ. 30,000 முதலீடு செய்தார்.

1. மோகன் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை யாது?
$= \frac{30,000}{15}$
$= 2000$ பங்குகள்.

2. அப்பாங்கின் பெயர் மாத்திரைப் பெறுமானம் யாது?
$= 2000 \times 10$
$= 20,000$.

3. ஓர் ஆண்டில் அவருக்குக் கிடைக்கும் வருமானம் ரூபா. 3600 எனின், கம்பனி பங்கு இலாபம் கொடுக்கும் சதவீதம் யாது?
$3600 = \frac{20,000 \times 1 \times X}{100}$
$200x = 3600$
$X = 18$
சதவீதம் $= 18\%$.

30. தையற்பொறி ஒன்றை வாடகைக் கொள்வனவு முறைக்கு வாங்கும்போது, ஆண்டிற்கு 10 % வட்டி கொடுக்கவேண்டும். அதேவேளை கடன்தொகையும், வட்டியையும் 10 சம மாதத் தவணைக் கட்டணங்களில் கொடுத்து முடித்தல் வேண்டும். மாதந்தோறும் கொடுக்கவேண்டிய கடன்தொகையின் பகுதி ரூ. 2400 எனின்,

1. வட்டி கொடுக்கப்பட வேண்டிய மாத அலகின் எண்ணிக்கை
$\frac{n(n+1)}{2} = \frac{10(10+1)}{2} = \frac{10 \times 11}{5}$
$= 55$ மாத அலகுகள்.

2. கொடுக்கவேண்டிய மொத்த வட்டி யாது?
வட்டி $= \frac{2400 \times 55 \times 10}{12 \times 100}$
$= 1100$ ரூபா.

---

## காரணிப்படுத்தல்

### முறை I

காரணிப்படுத்தும்போது முறை 1 இல் கவனிக்கவேண்டியவை.

- முதலில் $X^2$ இற்கு முன்னுள்ள இலக்கத்தையும், X தவிர்ந்த மூன்றாவது இலக்கத்தையும் பெருக்கமாக இடப்படவேண்டும்.
- பின்னர் நடு எண் கூட்டல் எண்ணாகவும், அதாவது இரண்டு காரணியையும் கூட்டும்போது பெறப்படும் எண்ணாக அமையும் வண்ணம் ஒருபுறம் ஓர் எண்ணினால் பிரிக்கும்போது அதே எண்ணினால் மறுபுறம் பெருக்கிக் காரணி எடுக்கப்படவேண்டும்.

(1) $X^2 + 5x + 6$ இதற்குக் காரணியைக் காணும்போது,
$1 \times 6$
$2 \times 3$ எனவே 2 உம், 3 உம் காரணியாகும்.
$X^2 + 5x + 6$
$= X^2 + 2x + 3X + 6$
$= X(X+2) + 3(X+6)$
$= (X+2)(X+3)$.

(2) $X^2 + 15X + 56$
இதற்குக் காரணி காணும்போது,
$1 \times 56$
$2 \times 28$
$4 \times 14$
$8 \times 7$ இதன் காரணி 8 உம், 7 உம் ஆகும்.
$X^2 + 15X + 56$
$= X^2 + 8X + 7X + 56$
$= X(X+8) + 7(X+8)$
$= (X+8)(X+7)$.

(3) $Y^2 + 19Y + 78$
இதற்குக் காரணி காணும்போது,
$1 \times 78$
$2 \times 39$
$6 \times 13$ எனவே இதற்கு 6 உம், 13 உம் காரணியாகும்.

$Y^2 + 19Y + 78$
$= Y^2 + 6Y + 13Y + 78$
$= Y(Y+6) + 13(Y+6)$
$= (Y+6)(Y+13)$.

(4) $a^2 + 24a + 108$ இதற்குக் காரணி காணும்போது,
$1 \times 108$
$2 \times 54$
$4 \times 27$
$12 \times 9$
$6 \times 18$ இதற்குக் 6 உம், 18 உம் காரணியாகும்.
$a^2 + 24a + 108$
$= a^2 + 6a + 18a + 108$
$= a(a+6) + 18(a+6)$
$= (a+6)(a+18)$.

மேற்போன்ற உதாரணத்தைப்போல் பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1. $X^2 + 7X + 10$.
2. $Y^2 + 14Y + 40$.
3. $X^2 + 19X + 60$.
4. $P^2 + 25P + 100$.
5. $Y^2 + 18Y + 32$.
6. $T^2 + 16T + 60$.
7. $q^2 + 17q + 30$.
8. $a^2 + 15a + 44$.
9. $P^2 + 26P + 120$.
10. $a^2 + 32a + 60$.
11. $Y^2 + 24Y + 80$.
12. $X^2 + 37X + 232$.
13. $X^2 + 29X + 180$.
14. $P^2 + 25P + 126$.
15. $T^2 + 22T + 85$.

### முறை II

முதலில் பின்வருவனவற்றைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.
$+ \times + = +$
$- \times - = +$
$+ \times - = -$
$- \times + = -$

முறை II இல் பின்வரும் படிமுறை ஊடாகச் செய்யப்பட வேண்டும்.
மூன்றாம் இலக்கம் நேர்ப்பெறுமானமாகவும், நடு இலக்கம் மறைப்பெறுமானமாகவும் இருப்பின், எடுக்கப்படும் இரு காரணியும் (-) மறைப்பெறுமானமாக இடப்படவேண்டும்.
உதாரணமாக

1) $X^2 - 14X + 45$ இதற்குக் காரணி காணும்போது,
$1 \times 45$
$3 \times 15$
$9 \times 5$ எனவே இதற்கு 9 உம், 5 உம் காரணியாகும்.

$X^2 - 14X + 45$
$= X^2 - 9X - 5X + 45$
$= X(X-9) - 5(X-9)$
$= (X-9)(X-5)$.

2) $Y^2 - 18Y + 56$ இதற்குக் காரணி காணும்போது,
$1 \times 56$
$2 \times 28$
$4 \times 14$ இதற்குக் 4 உம், 14 உம் காரணியாகும். எனவே

$a^2 - 18a + 56$
$= a^2 - 4a - 14a + 56$
$= a(a-4) - 14(a-4)$
$= (a-4)(a-14)$.

மேற்போன்ற உதாரணத்தைப்போல பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1. $X^2 - 4X + 4$.
2. $X^2 - 9X + 20$.
3. $Y^2 - 13Y + 36$.
4. $P^2 - 17P + 52$.
5. $K^2 - 28K + 160$.
6. $X^2 - 16X + 15$.
7. $Y^2 - 24Y + 128$.
8. $P^2 - 21P + 90$.
9. $X^2 - 29X + 180$.
10. $Y^2 - 27Y + 50$.

### முறை III

முறை III இல் மூன்றாம் உறுப்பு மறைப்பெறுமானமாகவும், நடு உறுப்பு மறைப்பெறுமானமாகவும் இருக்கும்போது - இதற்கு எடுக்கப்படும் ஒரு காரணி மறைப்பெறுமானமாகவும், மற்றைய காரணி நேர்ப்பெறுமானமாகவும் எடுக்கப்பட வேண்டும். ஆனால் பெரிய காரணியை மறைப்பெறுமானமாக இடப்படவேண்டும்.
உதாரணமாக -

1) $X^2 - 10X - 75$ இதனைக் காரணிப்படுத்தும்போது,
$1 \times 75$
$3 \times 25$
$-15 \times 5$ எனவே -15 உம், 3 உம் காரணியாகும்.

$X^2 - 10X - 75$
$= X^2 - 15X + 5X - 75$
$= X(X-15) + 5(X-15)$
$= (X-15)(X+5)$.

2) $a^2 - 16a - 132$ இதற்குக் காரணி காணும்போது,
$1 \times 132$
$2 \times 66$
$12 \times 11$
$6 \times 22$
இதற்கு 6 உம், -22 உம் காரணிகளாகும்.

$a^2 - 16a - 132$
$= a^2 + 6a - 22a - 132$
$= a(a+6) - 22(a+6)$
$= (a+6)(a-22)$.

இம்முறையில் பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1. $a^2 - 17a - 200$.
2. $P^2 - 19P - 20$.
3. $Y^2 - 26Y - 120$.
4. $K^2 - 15K - 126$.
5. $X^2 - 13X - 210$.
6. $Y^2 - 18Y - 40$.
7. $R^2 - 24R - 180$.
8. $a^2 - 33a - 280$.
9. $X^2 - 17X - 110$.
10. $X^2 - 23X - 680$.

### முறை IV

முறை IV இல் மூன்றாம் உறுப்பு மறையாகவும், நடுப்பெறுமானம் நேராகவும் காணப்படின், அதற்கு எடுக்கப்படும் காரணிகளில் ஒன்று நேராகவும், மற்றையது மறையாகவும் இருக்கவேண்டும்.

உதாரணமாக -

1) $X^2 + 12X - 45$ இதற்குக் காரணி காணும்போது
$1 \times 45$
$3 \times 15$ எனவே இதற்கு -3 உம், 15 உம் காரணியாகும்.

$X^2 + 12X - 45$
$= X^2 - 3X + 15X - 45$
$= X(X-3) + 15(X-3)$
$= (X-3)(X+15)$.

2) $a^2 + 16a - 80$ இதற்குக் காரணி காணும்போது,
$1 \times 80$
$2 \times 40$
$-4 \times 20$ இதன் காரணி -4 உம், 20 உம் ஆகும்.

$a^2 + 16a - 80$
$= a^2 - 4a + 20a - 80$
$= a(a-4) + 20(a-4)$
$= (a-4)(a+20)$.

மேற்போன்ற உதாரணத்தின் மூலம் பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.

1. $P^2 + 22P - 75$.
2. $X^2 + 26X - 120$.
3. $Y^2 + 35Y - 200$.
4. $X^2 + 13X - 140$.
5. $P^2 + 24P - 180$.
6. $X^2 + 14X - 120$.
7. $Y^2 + 16Y - 225$.
8. $T^2 + 29T - 252$.
9. $X^2 + 10X - 119$.
10. $Y^2 + 11Y - 152$.

### முறை V

முறை I இன் உதாரணத்தைப்போல இது செய்யப்பட வேண்டும்.
உதாரணம் -

1) $2X^2 + 13X + 20$ இதற்குக் காரணி காணும்போது,
$2 \times 20$
$4 \times 10$
$8 \times 5$ இதற்கு 8 உம், 5 உம் காரணியாகும்.

$2X^2 + 13X + 20$
$= 2X^2 + 8X + 5X + 20$
$= 2X(X+4) + 5(X+4)$
$= (X+4)(2X+5)$.

2) $5X^2 + 50X + 120$ இதற்குக் காரணி காணும்போது,
$5 \times 120$
$10 \times 60$
$20 \times 30$ இதற்கு 20 உம், 30 உம் காரணியாகும்.

$5X^2 + 50X + 120$
$= 5X^2 + 20X + 30X + 120$
$= 5X(X+4) + 30(X+4)$
$= (X+4)(5X+30)$.

மேல் காணப்படும் உதாரணம் மூலம் காரணிப்படுத்துக.

1. $16q^2 + 58q - 30$.
2. $6Y^2 + 68Y + 80$.
3. $24X^2 + 102X + 100$.
4. $12Y^2 + 112Y + 200$.
5. $4X^2 + 90X + 500$.
6. $8P^2 + 105P + 250$.
7. $2X^2 + 77X + 180$.
8. $4Y^2 + 38Y + 90$.
9. $8X^2 + 90X + 250$.
10. $2Y^2 + 82Y + 800$.

### முறை VI

முறை II, III ஐப் பின்பற்றி பின்வருவனவற்றைக் காரணிப்படுத்துக.
உதாரணமாக -

1) $5X^2 - X - 120$ இதனைக் காரணி காணும்போது,
$5 \times 120$
$50 \times 12$
$25 \times 24$ இதற்கு - 25 உம், 24 உம் காரணியாகும்.

$5X^2 - X - 120$
$= 5X^2 - 25X + 24X - 120$
$= 5X(X-5) + 24(X-5)$
$= (5X+24)(X-5)$.

(தொடரும்...)

சி.சிவச்செந்தூரன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P.- 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
இவறலும் மாண்புஇறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.
- திருக்குறள்

# நமது நோக்கு

## அனுபவமும் ஆதாயமும் !

'கூடாரத்தில் தலையை நுழைப்பதற்கு இடங் கொடுக்கப்பட்ட ஒட்டகம், முழுக்கூடாரத்தையும் ஆக்கிரமிக்க முயன்ற' கதையாக - தேசிய லொத்தர் சபையைத் தன்வசம் எடுத்துக்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தகவற்துறை அமைச்சையும் தன்னிடம் எடுத்துக்கொள்ள முயற்சிப்பதாகத் தெரிய வருகின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற கோதாவில் - தனக்குரிய அதிகாரங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதுடன் - ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளுவதாகவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகள் அமைந்து வருகின்றன.

தகவற்துறை அமைச்சை - ஜனாதிபதி சந்திரிகா தன்னிடம் எடுத்துக்கொள்ள முயற்சிப்பதற்குப் பின்னணியிலுள்ள காரணிகள் மிக வலுவானவையாக இருக்கின்றன.

அரசாங்க ஊடகங்கள் வழியாக - ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தன்மீது வேண்டுமென்றே அவதூறுகளைச் சுமத்தி வருவதாகவும், தனது கருத்துக்கள் - மக்களைச் சென்றடையாமல் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்படுவதாகவும் பல தடவைகள், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்து வந்திருக்கிறார்.

தகவற்தொடர்பு அமைச்சு மூலமாக அரசாங்க ஊடகங்களைக் கட்டுப்படுத்த முனைவதில் ஆர்வம் காட்டுகின்ற ஜனாதிபதி - ஏற்கனவே தமது ஆட்சிக் காலத்தில் அரசாங்க ஊடகங்கள் மூலம் பெருமளவு அரசியல் இலாபத்தைச் சம்பாதித்து வந்தார் என்பதை- கடந்த ஆட்சிக்காலத்தில் அரசாங்க ஊடகங்களை அவதானித்து வந்த எவரும் மறந்துவிட முடியாது.

அதிலும் குறிப்பாக - கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் - அரசாங்கத் தொலைக்காட்சிச் சேவையான 'ரூபவாஹினி' மூலம் தேர்தலுக்கு முந்தைய தினம் - ஜனாதிபதியும் அவரது பொதுஜன ஐக்கிய முன்ன்ணியும் செய்த 'அதிரடிப் பிரசாரங்கள்' எவராலும் மறக்க முடியாதவையாகும்.

என்றாலும் - நாடாளுமன்றத் தேர்தலில் அவருக்கு வெற்றி கிடைக்காவிட்டாலும் - இந்தப் பிரசாரங்கள், கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததை அரசியல் அவதானிகள் நினைவுகூரவே செய்வர்.

இதன் பின்னர் - ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பொறுப்பேற்றதன் பிற்பாடு - அரசாங்க ஊடகங்களின் தலைமைப் பதவிகளுக்குச் செய்யப்பட்ட மாற்றங்கள் மூலம் - அவை, இன்று ஐ.தே.மு சார்பானவையாகவே உருவாக்கப்பட்டிருக்கின்றன.

ரணில் அரசாங்கத்தின் பதவிக்காலத்தில் - அரசாங்க ஊடகங்களை, ஜனாதிபதி என்ற ரீதியில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் தனக்கு மறுக்கப்பட்டதாகவும் - 'நாட்டு மக்களுக்கு உரையாற்றும்' வேளைகளிலும் மிகுந்த சிரமப்பட்டே தொலைக்காட்சியின் ஒத்துழைப்பைப் பெற்றதாகவும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவால் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இதேவேளை - பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய தலைவர்களும் - தகவல்துறை அமைச்சு மீதான தமது காட்டமான விமர்சனங்களை முன்வைத்தே வந்திருக்கின்றனர்.

இந்தவகையில் - தேசிய லொத்தர் சபையைப் பொறுப்பேற்ற விவகாரம் மூலமாக - தனது முதலாவது தலையீட்டை நடாத்தியிருந்த ஜனாதிபதி - தொடர்ந்து இரண்டாவது தலையீட்டைத் தொடர்வதற்கும் ஆயத்தமாகியிருக்கிறார்.

அதேவேளை - முற்றிலுமாகத் தனது அரசியல் ஆதாயத்தை நோக்கியதாக ஜனாதிபதி மேற்கொள்ளவிருக்கும் இச்செயற்பாடானது - கொழும்பின் இரு அதிகாரத் தரப்பினருக்கிடையேயுள்ள நேரடி மோதலை இன்னமும் தீவிரப்படுத்தக்கூடியதாகவே இருக்கும்.

அரசாங்கத்திற்கும், மக்களுக்குமான தொடர்பாடலை - அரசாங்கத்தின் எண்ணக்கருக்களை, திட்டங்களை, அபிப்பிராயங்களை மக்களிடம் எடுத்துச் சொல்வதற்கு வழிசெய்யும் வலுமிகுந்த தகவற்துறை அமைச்சை விட்டுக் கொடுப்பதற்கு - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ, ஐக்கிய தேசிய முன்னணியோ கிஞ்சித்தும் தயாராயிருக்காது என்ற நிலையில் - ஜனாதிபதி தகவற்துறை அமைச்சைக் கையேற்பதற்கு மேற்கொள்ளப்படும் எத்தகைய முயற்சிகளும் இருதரப்புக்குமிடையிலான அரசியற் சச்சரவை உச்ச நிலைக்குக் கொண்டு செல்லும் என்றே எதிர்பார்க்கலாம்.

### பிரான்ஸ் மருத்துவர் விடுமுறையில்

# மந்திகை ஆதார வைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவு செயலிழப்பு

(பருத்தித்துறை)

மந்திகை மருத்துவமனைச் சத்திரசிகிச்சைப் பிரிவு கடந்த சில தினங்களாகச் செயலிழந்துள்ளது.

மந்திகை மருத்துவமனையில் பிரான்ஸ் நாட்டு மருத்துவ குழுவின் கீழ் இயங்கிவந்த சத்திரசிகிச்சைப் பிரிவு - அக் குழுவைச் சேர்ந்த சத்திரசிகிச்சை நிபுணர் விடுமுறையில் சென்றதைத் தொடர்ந்து செயலிழந்திருக்கிறது.

இதனால், சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படவேண்டியவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

மேலும் - பிரான்ஸ் நாட்டு மருத்துவக் குழுவினரின் சேவை அடுத்த மாதத்துடன் மந்திகை மருத்துவமனையில் நிறுத்தப்படவுள்ளதாக மேற்படி மருத்துவக் குழுவினர் ஏற்கனவே அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இவர்களின் சேவை அடுத்த மாதத்துடன் நிறுத்தப்படுமாயின், மந்திகை மருத்துவமனை மேலும் பல நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டிவரும் என மருத்துவமனையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஜனாதிபதி - அமைச்சரவை முறுகல் தீர்த்துவைக்க சமயத்தலைவர்கள்

அபிவிருத்தி லொத்தர்சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதால் ஏற்பட்டுள்ள சர்ச்சைகளைத் தீர்க்கும் முயற்சியில் சமயத் தலைவர்கள் ஈடுபடவுள்ளனர்.

சமயங்களுக்கிடையிலான சமாதான அமைப்பின் சர்வமதத் தலைவர்கள் ஜனாதிபதி சந்திரிகாவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து இந்தப் பிரச்சினை குறித்துப் பேசவுள்ளனர்.

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளுக்கு தற்போதுள்ள நெருக்கடி முட்டுக்கட்டையாக அமைந்துவிடக்கூடாது என இவர்கள் வலியுறுத்துவர்.

இலங்கை சர்வமத நிலையம் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாக அதன் தலைவர் பி.அந்தோனி தெரிவித்துள்ளார்.

## வட - கிழக்கு புனரமைப்புக்கு முறையான திட்டங்கள் இல்லை!

### தேசிய கட்டட நிர்மாண சங்கம் குற்றச்சாட்டு

வடக்கு - கிழக்கு புனருத்தாரண நடவடிக்கைகளில் இதுவரை முறையான நடைமுறைத்திட்டங்கள் தயாரிக்கப்படவில்லையென்று இலங்கைத் தேசியக் கட்டட நிர்மாண சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதனால், பிரதேசத்தின் அபிவிருத்திக்காக ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பாரிய நிதி - பெருமளவில் வீண்விரயமாகக்கூடுமென்று சங்கத்தலைவர் கவலை தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திப் பணிகளில் உச்சபயனைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், சர்வதேச சமூகத்திடமிருந்து கிடைக்கும் 3 பில்லியன் டொலர் நிதியை, வடக்கு - கிழக்கில் பயன்படுத்துவதற்குச் சிறந்த திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இதற்குச் சிறந்த தொடர்பாடலுடன் இணைந்த செயற்திட்டங்கள் அவசியமானதென்று அவர் மேலும் தெரிவித்தார்

# பூட்டிய நிலையில் இருக்கும் ஆயுர்வேத வைத்தியசாலை

யாழ்.பருத்தித்துறை வீதியில் கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடிக்கு அருகில் அமைக்கப்பட்ட சித்த ஆயுர்வேத வைத்தியசாலையின் கட்டட வேலைகள் பூர்த்தியாகி ஒரு வருடமாகியும் திறக்கப்படாதுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் முதல் இக்கட்டடத்திற்கு ஒரு நிரந்தர காவலாளி நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, மந்திகை மருத்துவமனையில் பணிபுரியும் காவலாளிகள் இருவர் தற்காலிகமாக இங்கு கடமைபுரியும்படி பணிக்கப்பட்டுள்ளனர்.

காவலாளிகள் தங்குவதற்குக் கட்டடத்தில் ஒரு சிறிய பகுதி மட்டும் பயன்படுத்தப்படுவதுடன், ஏனைய பகுதிகள் யாவும் பூட்டியநிலையிலேயே உள்ளன. காவலாளிகள் இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்குக்கூட அங்குள்ள மலசலகூடங்களைப் பயன்படுத்த முடியாதவாறு பூட்டியநிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக்கட்டடம் பூட்டிய நிலையில் இருப்பது தொடர்பாக மக்கள் விசனம் தெரிவித்தபோதும் உரிய அதிகாரிகள் இதுபற்றி எந்த நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

## ஜனாதிபதியின் நடவடிக்கையை மக்களுக்கு தெளிவுபடுத்த ஏற்பாடு

### அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு

தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்திப் பொறுப்பேற்றுக்கொண்டமை தொடர்பாக நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்துவது என்று நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

எதிர்வரும் 22 ஆம் திகதிமுதல் 25 ஆம் திகதிவரை நாடு தழுவியாரீதியில் ஜனாதிபதியின் நடவடிக்கை குறித்து பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கு விசேட ஏற்பாடுகளைச் செய்வதற்கும் முடிவுவெடுக்கப்பட்டது.

தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்பது தொடர்பாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி எந்தவித அறிக்கையையும் வெளியிடாதமை குறித்தும் அமைச்சரவைக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. (01)

## யாழ். பொலிஸ் நிலையத்துக்கு தொல்லை கொடுக்கும் பன்றிகள்

யாழ். பொலிஸ் நிலையத்தில் பன்றிகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் கவனிப்பாரற்ற நிலையில் பெரும் எண்ணிக்கையில் படையெடுத்து வரும் பன்றிகள், குற்றத்தடுப்புப் பிரிவுக்குப் பின்னாலுள்ள குளப்பகுதியில் பாரிய குழிகள் தோண்டி, அதில் படுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

பொலிஸ் நிலையப்பணிகளைக் கவனிக்க முடியாதளவுக்கு இதனால் துர்வாடை வீசுவதாகவும், இச்சீர்கேட்டால் தமக்குப் பெரும் இடையூறுகள் ஏற்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். (சு)

## துறைமுகத்தில் தரித்திருந்த கப்பல் கடும் காற்றினால் தரை தட்டியது!

கொழும்பு துறைமுகத்துக்கருகில் தரித்திருந்த மாலை தீவுக் கப்பல் ஒன்று கடும் காற்றினால் நங்கூரத்தை அறுத்துக் கொண்டு மொரட்டுவ கடற்பரப்பில் கற்பாறை ஒன்றுடன் மோதித் தரைதட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையின் ரங்கல தளத்துக்கு இது தொடர்பாக, நேற்றுமுன்தினம் காலை அறிவிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

46 மீற்றர் நீளமுடைய இந்தக் கப்பல் தரைதட்டியுள்ள இடத்துககுக் கடற்படைப் படகு ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# மறியல் செய்த மருத்துவர்கள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்!

## இரு பெண் வைத்தியர்கள் படுகாயம்

மத்திய மாகாண சுகாதார அமைச்சுக்கு முன்பாக - பதிவு செய்யப்பட்ட உதவி வைத்தியர்கள் நேற்றுமுன்தினம் நண்பகல் நடத்திய மறியற்போராட்டத்தின்போது, இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் இரு பெண் வைத்தியர்கள் படுகாயத்துக்குள்ளாகினர்.

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 156 உதவி வைத்திய அதிகாரிகள் கடந்த 8 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் இந்த வைத்தியர்கள் கோரிக்கைகள் அடங்கிய சுலோக அட்டைகளுடன் மத்திய மாகாண சுகாதார அமைச்சுக்கு முன்பாக மறியற் போராட்டத்தை நடத்தினர். இதன்போதே இனந்தெரியாதோர் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த தாக்குதலில் வைத்தியர்கள் கலைந்து ஓடியதாகவும், இரண்டு பெண் வைத்தியர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சித்த வைத்தியமும் மக்கள் தேவையும்

**32 வருடகாலமாக சித்த வைத்தியத்துறையில் பணியாற்றிவரும் - சித்த வைத்தியர் செ.பரமசிவம்பிள்ளை தனது அனுபவங்களை நமது ஈழநாட்டுடன் பகிர்ந்து கொள்கிறார்.**

தமிழ்மக்களின் பாரம்பரிய சொத்தாகிய சித்த வைத்தியம் சித்தர்களால் மெஞ்ஞானத்தின் அனுபவத்தின் மூலமாக வளர்க்கப்பட்டு வந்ததாகும். அது கர்ணபரம்பரையாக, ஏட்டுச்சுவடியாகப் பதிவுகள் மூலம் பேணப்பட்டு வந்தது. இவற்றுள் பல வைத்திய முறைகள் அழிந்துவிட்டன.

உலகம் தோன்றிய காலம் தொட்டு சகல தாவர, தாது, உலோக மூலிகைப் பொருட்களின் குண இயல்புகள், வைத்தியப் பயன்பாடுகள் பற்றி எல்லாம் சித்தர்களால் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது.

பல விடயங்கள் நுணுக்கமாகவும், சுருக்கமாகவும் கூறப்பட்டுள்ளது. பல விடயங்கள் நவீன தொழில்நுட்ப விஞ்ஞான ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் பல விடயங்கள் விஞ்ஞானத்தின் மூலமும் விளங்கமுடியாத புதிராகவும் உள்ளது.

இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைப் பொருட்களின் மூலக்கூறுகளை விஞ்ஞானத்தின் மூலம் இனங்கண்டு, அவற்றைச் செயற்கையாக உருவாக்கிப் பலவித வடிவங்களில் மருந்துகளாக அவை வெளிவந்துகொண்டு இருக்கின்றன. சித்த மருந்துகள் மட்டும் இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைப் பொருட்களைக்கொண்டு தயாரிக்கப்படுகின்றன. அதனால் பக்கவிளைவுகள் மிகமிகக் குறைந்த அளவுடையதாகவே இருக்கின்றது.

வைத்திய ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஏனைய பல நாடுகள் கோடிக்கணக்காகப் பணத்தை அள்ளி அள்ளி வழங்கி வருகின்றன.

எமது சித்த வைத்திய வளர்ச்சிக்கு அரசாங்கமோ, எந்த நிறுவனங்களோ எந்தவிதமான உதவிகளும் வழங்குவதில்லை. ஒவ்வொரு வைத்தியர்களும் தமது சக்திக்கு உட்பட்ட வகையில் ஆய்வுகளை மேற்கொண்டு கையாட்சி வைத்தியமுறைகளைத் தம்மகத்தே பேணிவருகின்றார்கள்.

தற்போதுள்ள வைத்தியர்களும் பட்டங்கள், பதவிகள் அடிப்படையிலும், மனக்குரோதங்கள் மதிக்காத தன்மையாலும் பிரசித்தி பெற்ற அனுபவமுள்ள வைத்தியர்களும்- பொருத்தமான வைத்திய சாலைகள் அமையாததாலும், தங்கள் கையாட்சி வைத்தியமுறைகள், வைத்திய நுணுக்கங்களை வெளிப்படுத்தி வராமையாலும், பாரம்பரிய வைத்திய தொடர்ச்சிவராமையாலும் - பாரம்பரிய வைத்திய தொடர்ச்சி குன்றிவருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எமது பிரதேசங்களில் ஆங்காங்கே தலைசிறந்த சித்தவைத்தியர்கள் இருபது, முப்பது வருடங்களுக்கு முன்பாக இருந்தார்கள். யுத்தநிலை, இடப் பெயர்வு, பொருட்கள் அழிவு, வெளிநாடு சென்றமை, பிள்ளைகள் வேறு தொழில் செய்தல் போன்ற காரணங்களால் கைதேர்ந்த பல வைத்தியமுறைகள் அருகிவருகின்றன. இவற்றை ஆவணப்படுத்தவும் முடியாது போய்விடுகின்றது.

மருந்து உற்பத்திக்குத் தேவையான சில மூலப்பொருட்கள் கிடைக்காமை, அவை தரமானவையாக கிடைக்காமை போன்ற காரணங்களால் பல முக்கியமான மருந்துகள் செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இருந்தபோதும், கைதேர்ந்த சில குறிப்பிட்ட வைத்தியர்கள் மட்டும், கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு நூற்றுக்கு நூற்று வீதம் சித்த மருந்துகளைத் தாமே தயாரித்து, தற்போதும் நோயாளிகளுக்கு வழங்கி, அதிசயிக்கத்தக்க வகையில் நோய்களைக் குணப்படுத்தி வருகின்றார்கள்.




எமது வைத்திய மூலதத்துவத்தின்படியும் பல நோய்களைக் குணப்படுத்தக்கூடிய பல பொது மருந்துகளினாலும், பல சிறப்பு மருந்து வகைகளாலும், அனுபான மாற்றம், மருந்து சிகிச்சை முறையில் மாற்றங்கள் செய்து வருவதாலும்- ஒரே வைத்தியர் பல நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கக்கூடியதாக உள்ளது.

எமது சித்தர்கள் ஒவ்வொருவரும் பல வகையான நோய்களுக்கான நோய் நிர்ணயம், சிகிச்சை முறைகள் பற்றிக் கூறியுள்ளதையும் கவனிக்கலாம். மக்களும் தங்களுக்கு ஏற்படும் பலவிதமான நோய்களுக்கும் ஒரே வைத்தியனை நாடிச் செல்கின்றனர். இதனாலும், ஒரு வைத்தியன் ஒரு பிரிவு நோய்க்கான பூரணமான ஆய்வுகளை மேற்கொள்ளமுடியாதநிலை ஏற்படுகின்றது.

எனது முப்பத்திரண்டு வருடகால வைத்திய அனுபவ ஆய்வு அறிவுடனும், பரம்பரை வைத்திய அறிவுடனும் தற்போது கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட சித்த மருந்துகள் மூலம் குறுகிய, நீடித்த கால நோயாளிகளுக்குச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதில் நோய் நிர்ணய அறிக்கை, நோய் ஆய்வு அறிக்கை, நோய்தீர் ஆய்வு அறிக்கை, நோயாளர் வாய்மூல அறிக்கை போன்றவை ஆவணப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சிகிச்சை மூலம் பூரணசுகம் பெற்ற நோய்களாக -

முழங்காலில் நீர் சேர்தல் (பல தடவைகள் நீர்குத்தி எடுத்ததும்- நீர் குத்தி எடுக்கப்படாததும்), முழங்கால் மடித்து நீட்டமுடியாதநிலை (வருட, மாதக்கணக்காக உள்ளவர்கள் நோய் நிர்ணயம் செய்யமுடியாதநிலையில் உள்ளவர்கள்), மொழிவாதம் (**Bhumaloid Arthourte**) (நோய் ஆய்வறிக்கையில் நிர்ணயம் செய்யப்பட்டு மாத, வருடக்கணக்காக இருந்த நோயாளர்கள்), ஏனைய சில வாத சம்பந்தமான நோய்கள், உழுக்கு சம்பந்தமானவை, ஆண்மை குறைவு, குழந்தையின்மை, பீனிசம், நரம்புத்தளர்ச்சி, கரப்பான், சலரோகம் மற்றும்,

குழந்தைகளில் - தலை அவியல் கரப்பான், கிரந்தி, சளி,முட்டு, நீடித்த வயிற்றோட்டம், மலபந்தம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பல மேலை நாட்டவர்கள் எமது மருத்துவ முறையை ஆராய்ந்து அதிலுள்ள விசேட தன்மைகளை ஏற்றுக்கொண்டு வரும் இக்காலத்தில், எமது பாரம்பரிய சிறப்பான சித்த வைத்தியத்தில் நம்பிக்கை குறைந்து வருவதும், முறைப்படி கைக்கொள்ளாததும் கவலைக்குரியதே.

சித்த வைத்தியர்களுக்கு எனத் தனியான ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய வைத்தியசாலை அமைக்கப்படவேண்டும். அதில் செயன்முறை அனுபவமும், கைதேர்ந்த வைத்தியர்களையும், பாரம்பரிய சிறப்பு வைத்தியர்களையும் ஒன்றிணைத்து அவர்களின் வைத்தியச் சிறப்பு மக்களுக்குக் கிடைக்க ஏற்றஒழுங்கு செய்யலாம். உரியமுறையில் அவர்கள் சேவையைத் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் கையாட்சி முறை மூலம் நோய்தீர் அறிக்கை பெறலாம். வைத்தியர்களை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களால் இரகசியமாகப் பேணப்படும் வைத்தியமுறைகள் வெளிக்கொண்டுவரச் செய்யலாம். அது சம்பந்தமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வைத்திய முறைகளை ஆவணப்படுத்த முடியும். சிறப்பு மருந்துகளுக்



செ.பரமசிவம்பிள்ளை

கான உரிமையை உலகளவில் எமக்கென ஆக்கிக்கொள்ள முடியும்.

எமது வைத்தியத்தைப் பொறுத்தவரை வைத்திய அடிப்படைக் கல்வி எவ்வளவு முக்கியமோ, அதேயளவு முக்கியம் செயன்முறை அனுபவக் கல்வியும். ஏனைய வைத்தியத்தைப் போல் வரையறுத்த சிகிச்சை முறைகளைக் கூறாவிட்டாலும், செயன்முறை அனுபவத்தின் மூலம் அக்கல்வியைப் பெறமுடியும். அதன் மூலமே வைத்தியராக வெளிவருபவர்கள் சிறந்த சேவை செய்வதன் மூலம் பொருளாதார நிலையிலும் மேம்படலாம்.

இலங்கையில் முதன் முதலாக 1925 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 'லங்கா சித்த்' ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி- பல பாரம்பரிய வைத்தியர்களை உருவாக்கியது. அதில் கல்வி பயின்றவர்கள் பலர் தற்போதும் சிறந்த வைத்தியர்களாக இருக்கின்றார்கள். சொந்தக் கட்டடம் இல்லாதிருந்தும், அதேயிடத்தில் தொடர்ந்து இயங்கி வருகினறது. வட-கிழக்கு மாகாண சபையின குறைந்தளவு நிதியுதவியுடன் இது இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

# கடல் வேங்கை எழுந்திட்ட தமிழீழம் இனி கனவாகிப் போகாது ஒரு நாளும்

கனடாவிலிருந்து
சுதர்மா

**(நேற்றைய தொடர்ச்சி)**

அத்தோடு, கண்காணிப்புக் குழு மீதான அவரது கோபம் தணியவில்லை. கண்காணிப்புக் குழுவின் பரிந்துரையில் அது **Defacto ("Existing as a fact although it may not be legally accepted as existing")** என்கிற வார்த்தைப் பத உபயோகத்திற்கு ஒக்ஸ்போர்ட் அகராதியைத் துணைக்கழைத்திருப்பது குறித்து மிகவும் காட்டமாகத் தனது விசனத்தை வெளிக்காட்டியுள்ளார் கதிர்காமர்.

உலகின் எந்த ஒரு நாடும் இரண்டு கடற்படைகளைக் கொண்டிருக்கவில்லை என்ற கண்டுபிடிப்பை அறிவிக்கும் கதிர்காமர், கடற்புலிகள் எந்த நாட்டிற்குச் சொந்தமானவர்கள் என்ற கேள்வியை எழுப்பியுள்ளதோடு, இது இன்னொரு தேசத்தை உருவாக்குகின்ற செயற்பாட்டை அங்கீகரிப்பதாக அமைந்துவிடும் என்றும் தன் தேசத்தவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறார்.

அடுத்ததாக, கடற்புலிகளின் படகுகள் மீன்பிடி இழுவைக் கப்பல்களுக்கு ஆபத்தாக அமைந்துவிடும் என்று அச்சம் தெரிவித்துள்ள கதிர்காமர், அதற்கு மேலாக இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் சீன, ஜப்பான் மற்றும் கொரியாக் கப்பல்களுக்கும் இது ஆபத்தாக அமைந்துவிடும் என்ற ஆதங்கத்தை முன்வைக்கிறார்.

அடுத்து அவர் தனது வாதத்திற்காகத் தமிழக முதல்வரைத் துணைக்கழைத்தார். அதாவது, விடுதலைப் புலிகளால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது குறித்துத் தமிழக முதலமைச்சர் ஏற்கனவே விசனம் கொண்டிருக்கிறார். எனவே, இவ்வாறான செயற்பாடு எமது உறவைப் பாதிக்கும் என்று எச்சரித்திருக்கிறார்.

அதற்கும் மேலாக, இந்தியா குறித்த இன்னொரு அக்கறையை வெளிக்கொணர்கிறார் சாட்சாத் கதிர்காமர். அதாவது, இலங்கையின் வான்எல்லையைப் பாவிப்பதற்கு இந்தியாவிற்குத் தாம் அனுமதியளித்துள்ளதாகவும், எனவே கடற்புலிகள் பயிற்சியில் ஈடுபடும்போது, அவர்களை அப்பிரதேசம் சார்ந்த வான்எல்லைக்குள் பறக்க வேணடாம் என்று நிறுத்துவதா என்றதொரு கேள்வியை எழுப்பியதோடு, அவ்வாறு செய்வது நட்பு நாடொன்றுக்குக் கொடுக்கும் முறையற்ற பதிலாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.



புதிய கூட்டணி - கதிர்காமர், சந்திரிகா, ஜெயலலிதா

அதாவது, தடைசெய்யப்பட்ட அமைப்பொன்று தொடர்பாகத் தாம் எவ்வாறு இவ்வேண்டுகோளை விடுக்கலாம் என்ற கேள்வியை எழுப்பி நிற்கிறார்.

அதன் அடுத்த கட்டமாக, கடற்புலிகளின் படகுகளின் வெளியிணைப்பு இயந்திரங்கள் தொடர்பான ஆய்வில் ஈடுபட்ட கதிர்காமர், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பொழுது கடற்புலிகள் 40 குதிரைவலு இயந்திரங்களைப் பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர்.

ஆனால், தற்போது கண்காணிப்புக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் வரையறையில்லாத குதிரைவலு இயந்திரங்களைப் பாவிக்க வலியுறுத்துகிறது எனத் தெரிவித்துள்ளார். கதிர்காமரின் உண்மையற்ற இக்கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள இன்னொரு விடயம் யாதெனில்- இதுவே கடற்புலிகளைக் கரையோரப் பாதுகாப்புப் படகுகள், ஆழ்கடற்படகுகள், அதிவிரைவு தாக்குகலக் கொள்வனவு மற்றும் செயற்பாட்டில் ஈடுபட வழிவகுக்கும் என்று தெரிவித்துள்ளமையாகும்.

இந்தியா, இலங்கை என இரண்டு ஆழ்கடல் கடற்படைகளை ஏற்கனவே கொண்டுள்ள (**Blue water Navies**) இப்பிராந்தியத்தில் எதற்காக இன்னொரு கடற்படையின் பரிமாணம் என்று ஆதங்கப்படும் கதிர்காமர்- கடற்புலிகள் எந்த இறையாண்மையுள்ள தேசத்திற்குச் சொந்தமானவர்கள் என்கிற கேள்வியை இரண்டாவது தடவையாக மீண்டும் எழுப்புகிறார்.

அத்தோடு, புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டபோது, கடற்படையே இலங்கைத் தீவின் கடற்பரப்பைத் தனது பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தது எனவும், எனவே நிழலரச கடற்படை பற்றிய வாதம் ஏற்புடையதல்ல என்றும் தெரிவித்துள்ள கதிர்காமர், கண்காணிப்புக் குழுவின் பரிந்துரை ஒரு வாதத்திற்குத்தானும் ஏற்புடையதல்ல என்று அழுது வடித்திருக்கிறார்.

அதுசரி, கடற்புலிகள் எந்தத் தேசத்திற்குச் சொந்தமானவர்கள் என்று தெரியாதவராகக் கதிர்காமர் இருக்கமுடியாது. அண்மையில்கூட அவுஸதிரேலிய எஸ்.பி.எஸ். வானொலிககு வழங்கிய செவ்வியில், இரண்டு கடற்படைகள் இலங்கைத் தீவில் இருக்கிறது என்று தெரிவித்ததை, ஏனோ லக்ஸ்மனநாதன் கதிர்காமர் மறந்துவிட்டார்.

ஆனால், 2000 ஆம் ஆனையிறவு கைப்பற்றலுக்கான குடாரப்பு மற்றும் தரையிறக்கம் கடற்படை மட்டுமல்ல, சிங்களத்தின் முப்படைகளும் முயன்றும் தடுக்க முடியாமற் போன ஒன்று என்பதையும், கடற்புலிகளின் தாக்குகலங்களைக் கண்ணுற்றதும் சிங்களக் கடற்படை அவ்விடம் விட்டு அதிவேகத்தில் தப்பிச் சென்றதென்பதும் கதிர்காமர் அறியாத ஒன்றல்ல.

இருந்தும், அவர் சொல்ல விளைகிற சேதி வேறு. சொல்லப் பயன்படுத்துகிற பாஷையும் வேறு. கடற்புலிகளை அங்கீகரிப்பதன் மூலம் தமிழீழத்தின் பிறப்பிற்கான வழியை இலகுவாக்கிறீர்கள் என்று ரணில் அரசை எச்சரிக்கும் கதிர்காமர், மறுபுறத்தே இனியும் பேச்சு முயற்சிகள் குறித்துக் கவலையீனமாக இருக்கவேண்டாம் என்று சிங்களத்தை உசுப்புகின்ற சந்திரிகாவின் குரலாக ஒலிக்கிறார்.

இதையேதான் சந்திரிகாவும் "சமாதானத்தை மீண்டும் உயிர்ப்பிக்க வைத்துச் சீரான பாதையில் செல்லவிடுவதற்குச் சர்வதேச சமூகம் அக்கறை காட்டவில்லை" என்று இராஜதந்திரமாகச் சொல்லியிருக்கிறார்.

ஆகமொத்தம் "அலை வந்து தாலாட்டும் சிறுதீவு. அதிலிரண்டு நாடுகள் இது தீர்வு. கடல் வேங்கை எழுந்திட்ட தமிழீழம் கனவாகிப் போகாது ஒருநாளும்'' என்கிற பாடல் வரிகள் நிதர்சனமாகியுள்ளன.

*

# சவூதியில் அமெரிக்க குடியிருப்புகள் மீது தொடர்ச்சியான தற்கொலைத் தாக்குதல்!

## அல்-கொய்டா நடத்தியதாகத் தெரிவிப்பு

(ரியாட்)

**சவூதி அரேபியத் தலைநகர் ரியாட்டில் நேற்றுமுன்தினம் இரவு, அல்-கொய்டா அமைப்பு நடத்திய 3 தொடர் தற்கொலைத் தாக்குதலில் 29 அமெரிக்கர்கள் பலியாகினர், 200 பேர் காயமடைந்துள்ளனர். அமெரிக்கர் வாழும் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் அவர்களின் வர்த்தக மையங்கள் மீது இரவு 11.15 மணியளவில் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.**



ரியாட் நகரில் நான்கு கேந்திர நிலையங்கள் மீது வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட கார்களில் வந்து அல்-கொய்டா அமைப்பினர் இத்தாக்குதலை நடத்தியுள்ளனர். இத்தற்கொலைத் தாக்குதலில் மூன்று தற்கொலைப் படையினரும் பலியானதாகவும், தாக்குதலில் அவுஸ்திரேலியர் ஒருவரும், சவூதி மற்றும் லெபனான் நாட்டைச்சேர்ந்த இருவரும் பலியானதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கர்களின் குடியிருப்புக்கள் மீது நடந்த தற்கொலைத் தாக்குதலில் பலமாடிக் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன. தீயும் அங்கு பரவியுள்ளது.

கறுப்புநிற 'சவ்ரேலே கப்ரைஸ்' ரக காரில் ஆயுதபாணிகள் மிகவேகமாக வந்து குடியிருப்பின் பிரதான வாயிலை இடித்துக்கொண்டு உள் நுழைந்ததாகவும், கட்டடம் அருகே கார் வந்து நின்றதும் அது பலத்த ஒலியுடன் வெடித்துச் சிதறியதாகவும் இச்சம்பவத்தை நேரில் கண்ட காயமுற்றவர்கள் தெரிவித்தனர். காயமுற்றவர்களில் சவூதிப்படைகளுக்கு பயிற்சி வழங்க சவூதியில் தங்கியிருந்த அமெரிக்கப் படையதிகாரிகளும் இடம்பெறுவர். குண்டு வெடிப்புக்களின் ஒலி ஏவுகணைகள் வந்து வீழ்வதை ஒத்ததாக இருந்ததாக அமெரிக்கர் ஒருவர் குறிப்பிட்டார்.

சவூதியின் தலைநகர் ரியாட்டில் தங்கியுள்ள அமெரிக்கப் பொதுமக்களை- வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் எனவும், ஜன்னல்கள், கதவுகள் அருகில் நிற்கவேண்டாம் எனவும் சவூதியிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

தாக்குதல்கள் நடந்துள்ள சவூதி அரேபியாவுக்கு - அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் நேரில்சென்றுள்ளார். சவூதி அரேபியா - அல்-கொய்டா அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடனின் பிறப்பிடம் என்பது குறிப்பிடத்தக்கது.



## சவூதியில் அமெரிக்கப் படைகள்; திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை!



சவூதி அரேபியாவிலுள்ள தனது அனைத்துப் படைகளையும் திரும்பப் பெற்றுக்கொள்வது என, அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக சவூதிக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

1991 வளைகுடாப் போரின் போது, சவூதியில் அமெரிக்கப்படைகள் தளம் அமைத்தன. எனினும், அப்போர் முடிவடைந்த பின்னரும் ஐயாயிரம் அமெரிக்கப்படைகள் சவூதியில் நடைபெற்ற ஈராக் போரின்போது இத்தொகை இரட்டிப்பாக்கப்பட்டது.

இராணுவத்தேவைகளை கருத்திற்கொண்டே இந்த படைவிலகல் திட்டமிடப்பட்டதாகவும் பின்லேடனின் அச்சுறுத்தலால் அல்ல எனவும், அமெரிக்க அதிகாரிகள் கூறினர். சவூதியில் அமெரிக்கப் பிரசன்னத்தை, பல சவூதி அரேபியர்களும் ஒஸாமா பின்லேடனும் விரும்பவில்லை எனக் கூறப்படுகின்றது.


JAFFNA TECHNICAL INSTITUTE.
JAFFNA, SRI LANKA.
JAFFNA TECHNICAL INSTITUTE · JTI · SRILANKA
e-mail:jti@sltnet.li Reg. No 15251 T.P: 0777-292127

A/L 2003 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
இலவச கணனிப் பயிற்சி நெறி

கடந்த 24 வருடங்களாக கணனித்துறையிலும் தொழில்நுட்பத் துறையிலும் பெரும் பங்காற்றிவரும் எமது நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சியினை வழங்கிவருகிறது. அதேபோல் இவ்வாண்டும் பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

Diploma Courses

Diploma in Microsoft Oifce XP
* Introduction to Computer
* Word XP
* Access XP
* PowerPoint XP
* Excel XP
* Introduction to Intemet, E-mail

Diploma in Desktop Publishing
* Intioduction Computer
* Word XP
* Page Maker 7
* Corel Drow 11
* Photoshop 7
Duration 4 Months

Diploma in WindowsApplication
* Introduction to Computer
* Windows XP * MS DOS
* Visual Basic * HTML
* Introduction to Intemet, E-mail
Duration 6 Months

Diploma in Hirdware Engineering
* Hardware Concepts
* Assemble a Complete PC System
* Software Installations & Configurations
* Handling Diagnostic Tools
* Network, Fax modem Connection
* Multimedia, internet
* Computer Virus, Troubleshooting
Duration 4 Months

Diploma in Computer Programing
* Introduction to Computer
* Visual Basic 6
* C/C++
* Visual FoxPro 6
* HTML
* Java
* Internet, E-mail
Duration 8 Months

Diploma in Visual Basic Progrmming
Duration 4 Months

Certificate Courses
Word XP
Excel XP
Access XP
PowerPoint XP
Corel Draw 11
Page Maker 7
Visual FoxPro 6
HTML
Java
Oracle
Pascal
C/C++

புதிய பிரிவுகள் ஆரம்பம் {25.05.03 / 29.05.03} 10.00 மணி

இவ்விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அல்லது சுயமாகத் தயாரித்து கீழ்க்காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பவும்.

பதிவாளர்
JTI
இல.07, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

APPLICATION FORM
Full Name : ....................
Address : ....................
Date of Birth : ....................
Course : ....................
Date Signature of Applicant

Head Office: No:11/10B, Stanly Road, Jaffna, Srilanka.
Branch :No:7, Palaly Road, Jaffna, Srilanka.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## வடமராட்சி...

என அறியவருகிறது.

கடந்த வெள்ளியன்று மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில், படையினர் இந்த நிபந்தனையை முன்வைத்தனர்.

வல்வெட்டித்துறை பகுதியில் வெடிபொருட்களுடன் படகு ஒன்று மீட்கப்பட்டதையடுத்து, மீனவர்கள் இச்சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

மீனவர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்த கேணல் தரத்திலான அதிகாரியொருவர் மீனவர்களுடன் கலந்துரையாடினார்.

கடற்தொழிலில் ஈடுபடுத்தப்படும் மீன்பிடிப்படகில் வெடிகுண்டுகள் இருக்கின்றனவா என்பதை அறியப் படையினர் திடீர் திடீரென சோதனை நடத்துவர் என்றும், சந்தேகத்திற்கிடமான மீன்பிடிப்படகுகள் உடைக்கப்பட்டுச் சோதனை செய்யப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

படையினரின் இந்த அறிவிப்புக்கு, மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், உடைக்கப்படும் படகில் வெடிகுண்டு இல்லாவிட்டால் படையினர் உடைக்கப்பட்ட மீன்பிடிப்படகுக்கான பெறுமதியைத் தர வேண்டும் என மீனவர்கள் கோரினர்.

கடற்தொழிலில் ஈடுபடுத்தப்படும் படகில் வெடிகுண்டு இல்லையென உறுதிப்படுத்திய கடிதத்தினை அந்தந்தப் பகுதி மீன்பிடிச் சங்கங்கள் சிபார்சு செய்து, தம்மிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் படையினர் கோரியிருக்கின்றனர். (23,13,15)

## கடும் காற்றுடன்...

இமையாணன், வல்லியாவத்தை பகுதிகளில் பல பனைமரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன. சில மின் கம்பங்களும் சேதமடைந்துள்ளன.

பாரிய மரங்கள் வீதிகளில் வீழ்ந்ததால், போக்குவரத்தும் சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. வல்வெட்டித்துறையில் சில வீடுகளின் ஓடுகள், தகரங்கள் காற்றினால் தூக்கிவீசப்பட்டன.

திக்கம் வடிசாலையிலும் சேதங்கள் ஏற்பட்டுள்ளது. இதன் களஞ்சியப்பகுதி, இயந்திரப்பகுதிக் கட்டடங்களின் கூரைகள் தூக்கிவீசப்பட்டன. 40 அடி நீள மதிலும் இடிந்து வீழ்ந்தது. (116,128,124)

# இழுவைப்படகு உரிமையாளர் பகிஷ்கரிப்புப் போராட்டம்!

பருத்தித்துறை துறைமுகத்தில் இழுவைப்படகுகளின் உரிமையாளர்கள், கடந்த இரு நாட்களாகப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கடந்த பன்னிரெண்டு வருடகாலமாக பொருட்களைக் கப்பலில் இருந்து கரைக்குக் கொண்டுவரும் பணியில் ஈடுபட்டிருந்த இழுவைப்படகுகளை - வேலை முடிந்ததும் கடலில் இருந்து வெளியே எடுத்துச் செல்ல வேண்டும், மீண்டும் மறுநாள் வேலையை ஆரம்பிக்கும்போதே, கடலிற்குக் கொண்டுவரவேண்டும் என இராணுவத்தினர் புதிதாக விதித்த நடைமுறையை ஆட்சேபித்தே, மேற்படி இழுவைப்படகு உரிமையாளர்கள் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி பகிஷ்கரிப்பு போராட்டத்தால், இரண்டாயிரத்து ஐம்பது மெற்றிக்தொன் சீமெந்தினை தனியாருக்காக இந்தியாவில் இருந்து ஏற்றிக்கொண்டு வந்த 'சிற்றி ஒவ் லிவர் பூல்' என்ற கப்பலில் இருந்து சீமெந்து இறக்கும் பணி பாதிப்புற்றுள்ளது.

## ரெலோ....

அப்பகுதியால் நடந்துவந்த ஒருவரே பிஸ்ரலால் இவர் மீது சுட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலுக்கு ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அரச படையினரே இக்கொலையைச் செய்திருக்கலாம் என அவர் குற்றஞ்சாட்டினார்.

கொல்லப்பட்டவர் - கடந்த ஆறு வருடங்களுக்கு முன் ரெலோ இயக்கத்தில் இணைந்து, சில மாதங்களாக மத்தியகுழு உறுப்பினராகவும் செயற்பட்டு வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தையடுத்து வவுனியாவில் நேற்று முழுவதும் பதற்றம் நிலவியது. (ரா)

## இராணுவ வாகனம் மோதியதில் கொன்ஸ்டபிள் பலி!

(சாவகச்சேரி)

இராணுவ வாகனம் மோதியதில், மோட்டார் சைக்கிளில் சென்ற பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுக்காலை சாவகச்சேரி நகரில் இடம்பெற்றது.

நேற்றுக்காலை 8.30 மணியுளவில், சாவகச்சேரி பொலிஸ் நிலையம் முன்பாக நடைபெற்ற இந்த விபத்தில், தம்புள்ளவைச் சேர்ந்த ர.நீல்ரைற்றஸ் குலதுங்க (வயது 32) என்ற பொலிஸாரே பலியானவராவார். இவர், ஊர்காவற்துறையிலிருந்து சாவகச்சேரிக்கு மோட்டார் சைக்கிளில் பணிநிமித்தம் வந்தவர் எனத் தெரியவருகின்றது. (34, 29)

## அதிகாரம் பெற்ற...

மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா மற்றும் தயாநிதி மாஸ்ரர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் - இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராஜா, அ.விநாயகமூர்த்தி, சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், சிவசக்தி ஆனந்தன், ரவிராஜ், கஜேந்திரகுமார், சந்திரநேரு, தங்கவடிவேல், கிருஷ்ணபிள்ளை, துரைரட்ணசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், இராஜ குகனேஸ்வரன் ஆகியோர் - வவுனியாவில் ரெலோ உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தால் இச்சந்திப்பில் பங்கேற்கவில்லை.

நேற்றைய சந்திப்பிலும் - கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான வீ.ஆனந்தசங்கரி கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - இச்சந்திப்புப் பற்றிக் கருத்து வெளியிட்ட இரா.சம்பந்தன் தெரிவித்ததாவது,

அரசியல் தீர்வொன்றை பேச்சுக்கள் மூலம் அடைவதில் விடுதலைப் புலிகள் உறுதியாக இருக்கின்றனர். சமாதான முயற்சிகளில் தமது பரிபூரண ஒத்துழைப்பு இருக்குமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

வட-கிழக்கை கட்டியெழுப்புவதற்கும், சகஜ நிலையை உருவாக்குவதற்கும் - 'கிடைக்கின்ற அபிவிருத்தி நிதியைப் பயன்படுத்தக் கூடியதாகவும் - பூரண அதிகாரங்கள் கொண்ட கட்டமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென விடுதலைப் புலிகள் கருத்துக் கொண்டுள்ளனர்.

இவ்விதமான கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் மாத்திரமே, வட-கிழக்கை மீளக்கட்டியெழுப்பவோ, தமிழ் மக்களை சுமுக வாழ்க்கைக்கு இட்டுச்செல்லவோ முடியும் என்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாகவுள்ளனர்.

'சிறான்' அமைப்பினால் இந்தத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. வட - கிழக்குப் புனரமைப்பு நிதியம் ஆரம்பிக்கப்படும் எனக் கூறப்பட்டாலும் அது செயற்படுவதாகத் தெரியவில்லை.

எனவே - சகல அதிகாரங்களும் கொண்ட - நிதி, நிர்வாக மற்றும் தொடர்புடைய கருமங்களையாற்றக் கூடிய உறுதியான கட்டமைப்பு ஒன்று புதிதாக உருவாக்கப்படுவது அவசியமானது.

ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றுவதற்கு முன்னர் - இவ்விதமான அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டுமென விடுதலைப் புலிகள் கருதுகின்றனர்.

மக்கள் சுதந்திரமாக மீளக்குடியேறக்கூடிய வகையில் - இராணுவ முகாம்கள், தளங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்து செயற்பட வேண்டும். உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனப் புலிகள் வலியுறுத்துகின்றனர்.

விடுதலைப் புலிகளின் இந்தக் கருத்துக்களை நாம் நேற்றைய சந்திப்பில் அறிந்து கொண்டோம். இவற்றை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்திற்கும் எடுத்துச் சொல்லுவோம். இவற்றை நடைமுறைப்படுத்த இயன்ற அனைத்தையும் தமிழ்க் கூட்டமைப்புச் செய்யும் என இரா.சம்பந்தன் கூறினார்.

புனர்வாழ்வு அமைச்சினால் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தப்படும் Vocational Training Center களிற்கும், யாழ்.மாவட்டத்தில் சங்கானை, ஊர்காவற்துறை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் செயற்படும் Vocational Training Center களிற்குமான தலைமை நிறுவனமாக எமது நிறுவனமே செயற்படுவதுடன் அவற்றில் பயில்கின்ற மாணவர்களுக்கான பரீட்சைகள், மதிப்பீடுகள், சான்றிதழ் வழங்கல்கள் என்பவை எமது நிறுவனத்தாலேயே மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

ITP JAFFNA SRI LANKA

INFORMATION TECHNOLOGY PARK

Under the Purview of

Ministry of Rehabilitation , Resettlement & Refugees
272, Stanley Road, Jaffna, Sri Lanka.

Telephone: 021-2223641 E-mail: itp@sltnet.lk.

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் 2003 ஆம் ஆண்டின் 2ஆம் பருவத்திற்குரிய கணனிக் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 20-05-2003 தொடக்கம் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**Certificate Courses**

MS-Word, MS-Excel, MS-Access, AutoCAD, PageMaker, CoredDRAW.

Duration - 3Months | Course Fee-1000/-

Webpage & Graphics Design, C/C++, Visual Basic, Java, Oracle, Internet & E-mail, Hardware, HTML&Java Script.

Duration - 4 Months | Course Fee-1800/-

**Diploma Courses**

| Course Title | Duration | Fee |
|---|---|---|
| Dip. in MS-Office | 5 | 2800/- |
| Dip. in DTP | 5 | 2400/- |
| Dip. in Hardware Technology | 6 | 3200/- |
| Dip. in Information Technology | 4 | 4750/- |
| Dip. in Computer Programming | 6 | 5500/- |

விண்ணப்பம்/ பதிவுகளிற்கான முடிவுத் திகதி- 20-06-2003
வார இறுதி வகுப்புக்கள் ஆரம்பம் - 15-06-2003
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 16-06-2003

எமது நிறுவனத்தில் Diploma in Ms-Office, Diploma in Hardware Technology ஆகிய பயிற்சிநெறிகளைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கு DIT (Diploma in Information Technology) இல் பாடவிலக்கு(Exemption)வழங்கப்படுகின்றது. எனவே மாணவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பாடவிலக்கு விபரங்களைப் பெற்று பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலம் **Diploma in IT** சான்றிதழைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**Workshop Classes**

| Courses | Duration | Fee |
|---|---|---|
| Hardware | 20 hours | 1000/- |
| Internet & E-mail | 20 hours | 1000/- |
| Computer Typesetting | 20 hours | 1000/- |
| Computer awarness for beginners (கணனி பற்றிய அடிப்படை அறிவைப்பெற) | 20 hours | 250/- |

பயிற்சிப்பட்டறைகள் யாவும் 01-06-2003 இல் இருந்து ஆரம்பமாகும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**On line Classes**

| Course | Duration | Fee |
|---|---|---|
| Diploma in PC Application & Office Management (Specialy for Workers) | 3Months | 2750/- |

Week day Morning and Evening classes only.
Start on- 16-06-2003

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் ரூபா 250/- மட்டுமே.

**INTERNET CAFE**

யாழ்.மாவட்டத்திலேயே அதிகரித்த வேகத்துடன் மெருகூட்டப்பட்டு இணையசேவையானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. புதிய அங்கத்தவர்கள் 01-06-2003 இல் இணைந்துக் கொள்ளப்படுவர். ஏற்கனவே அங்கத்தவராகத் தம்மை இணைத்துக்கொண்டவர்கள் தமது பதிவுகளைப் புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*Centre for Information Technology*

For further Details: *Course Manager* (சி-932) Information: *Director*

## சார்ஸ்...

இதுவரை உறுதி செய்யப்படவில்லை என, எம்மிடம் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக உலகில் 'சார்ஸ்' நோய் பரவல் குறித்து வெளியான செய்திகள் காரணமாக அச்சமடைந்தும், விழிப்படைந்தும் உள்ள எம்மவர்களிடையே - இத்தகைய செய்திகள் பூதாகரமாக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். 'சார்ஸ்' தொற்று இனங்காணப்பட்டால், அது குறித்து அறிவுறுத்துவது வைத்தியசாலையின் முதற்பணியாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச)

... இல. 367, ... வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.